அச்சுவேலி, ச. குமாரசுவாமிக்குருக்கள் வெளியீடு.

# சைவப்பிரகாசிகை

## நான்காம் புத்தகம்.

1950.

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## நான்காம் புத்தகம்.

அச்சுவேலி

சரஸ்வதிவித்தியாசாலை மானேசர்

**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்**

அவர்களால் எழுதப்பெற்று,

ஷை குருக்களவர்களின் புத்திரர்

சிவஸ்ரீ. வைத்தியேசுவரக்குருக்களால்

தி. செல்வமனோகரன்

பருத்தித்துறை

**கலாநிதியந்திரசாலையில்**

பதிப்பிக்கப்பெற்றது.

நான்காம் பதிப்பு.

விகிர்தி௵ ஆனி௴.

1950.

*Rights Reserved.*

விலை சதம் 75.

செ. குணராசா [illegible] வகுப்பு



சிவபெருமான்.

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| | முகவுரை. | |
| க. | விநாயகக்கடவுள் ... ... | க |
| உ. | ஸ்ரீ ராமபிரான் சிவபூசைசெய்தது ... | ௩ |
| ௩. | பலராமர் ... ... | ௬ |
| ௪. | கிருஷ்ணர் I ... ... | ௮ |
| ௫. | கிருஷ்ணர் II ... ... | கக |
| ௬. | பகீரதராசன் ... ... | க௪ |
| எ. | தனபாலன் ... ... | க௬ |
| ௮. | அகத்தியமுனிவர் ... ... | க௮ |
| ௯. | அந்தகாசுரன் சாரூபம்பெற்றது ... ... | உக |
| க௦. | சிலந்தியும் சர்ப்பமும் யானையும் ... | உ௩ |
| கக. | சிவபெருமான் தாயானது ... ... | உ௬ |
| கஉ. | பொய் ... ... | உ௯ |
| க௩. | ஆலயதரிசனம் ... ... | ௩உ |
| க௪. | மதுரை ... ... | ௩௫ |
| க௫. | திருவாப்பனூர் ... ... | ௩எ |
| க௬. | காகபட்டணம் ... ... | ௪௦ |
| கஎ. | திருப்பெருந்துறை ... ... | ௪௩ |
| க௮. | பழநி ... ... | ௪௬ |
| க௯. | மயூரகிரி ... ... | ௪௮ |
| உ௦. | சீர்காழி ... ... | ௫௦ |
| உக. | திரிபுரசங்காரம் ... ... | ௫உ |
| உஉ. | பிக்ஷாடனர் ... ... | ௫௫ |
| உ௩. | இடபதேவருக்குப் புல் அருத்தியது ... | ௫எ |
| உ௪. | சிவஞானமுனிவர் ... ... | ௬௦ |
| உ௫. | சங்கரபண்டிதர் ... ... | ௬க |

செ. குணரத்ன 7ம் வகுப்பு 4

உ

# அணிந்துரை.

இலங்கை அரசாங்கசபைத் தலைவர்

கௌரவ

ஸ்ரீமான். வை. துரைசுவாமி அவர்கள்

எழுதியது.

எம் யாழ்ப்பாண நாடானது பரம்பரைச் சைவர்களுக்கும் பரமஞானிகளுக்கும் இருப்பிடமாயுள்ளது. ஆதலின், இந்நாட்டில் சைவசமயக்கல்வி இன்றியமையாதது. அதுவும் சிறுபருவத்தில் பயிற்றப்படுதல் அவசியம். அப்பொழுதுதான் "இளமையிற்கல்வி சிலையிலெழுத்து" என்ற முதுமொழிக்கு இலக்கியமாய்ச் சீவியகாலம் முழுதும் சைவவாழ்விற்கு உதவியாயிருக்கும். இத்தன்மையுடைய கல்வியைச் சைவமாணவர்கள் எல்லோர்க்கும் கற்பித்தல் அத்தியாவசியகமாகும்.

இச்சைவசமயக் கல்வியை எளிதில் படிப்பித்தற்கு அச்சுவேலி பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் எழுதிய சைவப்பிரகாசிகை 1, 2, 3, 4, 5-ம் புத்தகங்கள் பெரிதும் பிரயோசனமுள்ளன. அவை செந்தமிழ்நடையில் சிறுவர்க்கேற்ற முறையில் எழுதப்பட்டுள்ளன. சமய அறிவைப் பெரிதும் விருத்திசெய்வன.

தாது௵
ஆனிமீ ௨௯

வை. துரைசுவாமி.

பிரபல நியாயதுரந்தரரும்
சைவவித்தியாவிருத்திச்சங்க மனேஜருமாகிய
ஸ்ரீமான். சு. இராசரத்தினம் அவர்கள்
எழுதியது.

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் இடையரு முயற்சியின்பயனாக இப்பொழுது சைவப்பிரகாசிகை நான்காம் புத்தகம் வெளிவந்திருக்கிறது. இப்புத்தகத்தில் உள்ள பாடங்களெல்லாம் சைவசமய சம்பிரதாயங்களையே அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டவைகள்; அன்றி, சிறுவர்கள் இளைப்படையாது படிப்பதற்கேற்றவாறு, அளவாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாற்றால் இப்புத்தகம் சைவவித்தியாசாலைகளிற் கல்விபயிலும் மாணவர்களுக்கு வேண்டப்படுவதொன்று என்பது சொல்லாமலே அமையும். இதன் சிறப்புக்களை இனி இதற்குமேல் எடுத்துச்சொல்வது மிகை. குருக்கள் அவர்கள் நூலியற்றுந் திறமைகளை மஹாமஹோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலிய வடதேசத்துப் பழுத்த வித்துவான்களே பலவாறு பாராட்டியிருக்கின்றார்கள்.

சைவவித்தியா
விருத்திச்சங்கம்.
13-6-39.

சு. இராசரத்தினம்.

---

அரசாங்கசபைப் பிரதிநிதி
ஸ்ரீமான். சு. நடேசபிள்ளை B. A. B. L. F. R. E. S.
அவர்கள் எழுதியது.

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்களவர்கள் "சைவப்பிரகாசிகை" என்று மகுடமிட்டெழுதிய ஐந்து புத்தகங்களும் பள்ளிக்கூடங்களிற் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரக்கூடிய சிறந்தநூல்களாகும். சைவசமய உண்மைகளும் புராணசரிதங்களும் இந்நூல்களில் மிகத்தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளன.

சமயபாட புத்தகங்களாகவும் கதாவாசக புத்தகங்களாக வும் இந்நூல்கள் ஒருங்கே அமைந்திருத்தல் மிகவும் பாராட்டப் படத்தக்கது. பள்ளிக்கூடமாணவர்களுக்குச் சரிதங்கள் மூலிய மாய்ச் சமயஉண்மைகளைஉணர்த்துவது சிறந்த முறையாத லால் இந்நூல்களைத் தமிழாசிரியர்கள் எல்லாரும் ஆதரிப் பார்கள் என்று நம்புகிறேன்.

இராமநாதன்கல்லூரி,
சுன்னுகம்.
13-7-36.

சு. நடேசபிள்ளை.

---

பகுதிவித்தியாதரிசகர்

## ஸ்ரீமான். மு. தம்பிப்பிள்ளை அவர்கள்

எழுதியது.

---

பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்களவர்களாலியற்றப் பெற்ற சைவப்பிரகாசிகையென்னும் அரிய வாசகப்புத்தகங்கள் மிக்க சிறப்புடைய பாஷைநடையிலெழுதப்பட்டுள்ளன. சில பாடங்கள் நுணுகியஆராய்ச்சியின் பேற்றைக் காட்டுகின்றன.

இப்புத்தகங்கள் சைவப்பாடசாலைகளில் சமயபாடப்புத்தகங் களாக உபயோகிப்பதற்கு விசேஷ தகைமையுடையன.

மு. தம்பிப்பிள்ளை,
பகுதிவித்தியாதரிசகர்.

22-6-36.

---

வித்தியாதரிசகர்

## ஸ்ரீமத். சே. தியாகராசா அவர்கள்

எழுதியது.

---

சைவசமயத்தினை விளக்கி ஆன்றோரியற்றிய பல நூல்களுள வேனும் இளம்பருவச்சிறுர் எளிதில் அந்நூல்களை விளங்கமாட் டாராதலின், சைவசமய உண்மைகளை விளக்கி இத்தகைய

நூல்களியற்றப்படவேண்டியது ஆவசியகம். சைவப்பிரகாசிகை என்னுமிந்நூல் சைவசமய உண்மைகளை மாணவர்கள் எளிதில் நன்குணர்வதற்கு ஏற்ற முறையிலும் இனிய தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூலினைக் கற்குஞ் சிறார் இருவகையில் அறிவுவளர்ச்சியினைப் பெறுவர்; சமய அறிவினைப் பெறுதல் ஒன்று; இலக்கிய அறிவினைப் பெறுதல் மற்றொன்றாகும். இந்நூலினை ஆக்கியவர் பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்களாவர். இவர் தமிழபிமானமும் சைவப்பற்றும் ஆழ்ந்த சமயஞானமும் பெரிதுமுடையவர். இந்நூலினை ஆக்கி இவர் தமிழுலகிற்களித்துதவியதே இவரது சைவப்பற்றினை யாவர்க்கும் புலப்படுத்துகின்றது.

இதனைக் கதாவாசகப் புத்தகமாகவும் சமயநூலாகவும் சைவப் பாடசாலைகளிற் பயன்படுத்திக் குருக்களவர்களை இத்தொண்டில் மேன்மேலும் ஊக்கப்படுத்துதல் சைவமக்களது பெருங்கடனாகும்.

தெல்லிப்பழை.
22-6-36.

சே. தியாகராசா,
வித்தியாதரிசகர்.

---

வடமராட்சிப்பகுதி மணியகாரன்
ஸ்ரீமத். க. சின்னத்தம்பி அவர்கள்
எழுதியது.

அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் இயற்றிய சைவப்பிரகாசிகை என்னும் நூல்களைக் கவனமாய் வாசித்தேன். யாவரும் எளிதில் விளங்கக்கூடிய தெள்ளிய செந்தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. சைவ சமய அறிவை வளர்க்கக்கூடிய விஷயங்கள் அடங்கியுள்ளனவாகையால், இப்புத்தகங்களைச் சைவப்பாடசாலைகளில் வாசினைப் புத்தகங்களாய்ப் பாவித்தல் மிகவும் நன்மை பயக்கும்.

கரவெட்டி,
24-5-36.

க. சின்னத்தம்பி
வடமராட்சிமணியகாரன்.

---

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## நான்காம் புத்தகம்.

### க. விநாயகக்கடவுள்.

இராவணன் திருக்கைலாசமலையில் இருந்து தவஞ்செய்தான். பரமசிவன் தோன்றியருளி, அவனுக்கு ஒரு சிவலிங்கத்தைக்கொடுத்து "அரக்கனே! இவ்விலிங்கத்தை நீ அரசுபுரிகின்ற இலங்கையில் தாபிப்பாயாயின், விட்டுணு முதலிய தேவர்களும் உன்னை வெல்லமாட்டார்கள். இதைக்கொண்டுபோகும்பொழுது வாகனங்களில் ஏறிச்செல்லாமல், ஆசாரத்துடன் நடந்துசெல்லுதல்வேண்டும். பூமியில் வைத்தால், அவ்விடத்திலிருந்து எடுக்க முடியாது" என்றுசொல்லி மறைந்தருளினர். இராவணன் சிவபெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, மனமகிழ்ந்து இலங்கையை நோக்கிச்சென்றான்.

தேவர்கள் அதை அறிந்து விநாயகக்கடவுளுடைய திருச்சந்நிதானத்திற்போய், "அடியார்களுடைய இடரை நீக்கியருளுகின்ற கிருபாசமுத்திரமே! இராவணனுடையமனக்கருத்து நிறைவேருதபடி விக்கினஞ்செய்து, அடியேங்களை இரட்சித்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அதைக்கேட்டருளிய விக்கினேசுவரர் வருணனுடைய முகத்தைநோக்கி "நீ இராவணனுடைய வயிற்றிற்புகுந்து, சலவுபாதியை உண்டாக்குவாயாக" என்றுகட்டளையிட்டருளினர். வருணன் இராவணனுடையவயிற்றில் நீர் மிகும்படி செய்தான். விநாயகக்கடவுள் ஒருபிராமணப்பிரமசாரியாய் இராவணனுக்கெதிரில் வந்தருளினர். இராவணன் அப்பிரமசாரியை நோக்கி, "மறையவரே! எனக்கு நீர்மிகுத்து அகத்தை வாட்டுகின்றது. நான் சலவிசர்ச்சனஞ்செய்து சுத்திபண்ணிக் கொண்டு இங்கே வரும்வரையும் இச்சிவலிங்கப்பெருமானை வைத்துக்கொண்டிரும்" என்றான்.

பிரமசாரி "இராவணனே, இந்தச்சிவலிங்கத்தை நெடுநேரம் கையில் வைத்துக்கொண்டிருப்பதற்கு எனக்கு வல்லமை இல்லை.

நீ வலிதிற்றருகின்ருய்; தந்தால் நல்லதே; மூன்றுமுறை அழைப்பேன்; நீ வராவிட்டால் பூமியில் வைத்துவிடுவேன்" என்று கூறியருளினர். இராவணன் அதற்கு உடன்பட்டு, சிவலிங்கப்பெருமானை அவர்கையிற்கொடுத்துச் சலவிசர்ச்சனத்துக்குப் போனன். அவன் நெடுநேரம் வராதிருத்தலும், பிரமசாரிவடிவங் கொண்ட விநாயகக்கடவுள் "இராவணு! இங்கேவா, இராவணு! இங்கேவா! இராவணு! இங்கேவா" என்று மும்முறை அழைத்தார். அவன் வந்திலனுக, விக்கினேசுவரர் சிவலிங்கத்தைப் பூமியில் வைத்தார். வருணனும், அவன் வயிற்றினின்றும் விலகினன்.

இராவணன் சுத்திசெய்தபின், பிரமசாரியின் முன்னிலையை அடைந்து, சிவலிங்கம் பூமியில் இருப்பதைக் கண்டான். உடனே விநாயகரைக் கோபித்துப்பார்த்து, இலிங்கத்தை இருபது கரங்களாலும் மகாபெலத்தோடு பிடித்திழுத்தான். இலிங்கம் நிலைபெயர்ந்திலது. இராவணன் தன்னுல் இழுக்கமுடியாமையின், "இதுமகாபெலலிங்கம்" என்ருன். உலகத்தவர் இராவணன் கூறியதை அறிந்து அவ்விலிங்கத்தை மகாபெலநாதர் என்று வணங்கி வருகின்ருர்கள். அரக்கன் பின்பும் தன்னுலானமட்டும் இழுத்தான். அந்த இலிங்கம் குழைந்து பசுவின்காதுபோல நிமிர்ந்தது. அதனுல் அத்தலம் திருக்கோகர்ணம் என்று பெயர்பெற்றது.

இராவணன் கோபம் மிகுந்தவனுய் தனது இருபதுகரங்களினுலும் விநாயகருடைய தலையிலே குட்டினன். குட்டியவுடன், விநாயகர் விசுவரூபங்கொண்டு தோன்றி, இராவணனைத் திருக்கரத்தினுலே தூக்கி, பந்துபோற் பலமுறை எறிந்து பூமியில் விழாதபடி வந்தினர். இராவணன் இளைப்படைந்து அகந்தை நீங்கி, "என்னுடைய அறியாமையால் இவ்விதஞ்செய்தேன்; அப்பிழையைப் பொறுப்பது உமக்கு இயல்பாகும்" என்று இரந்து இரந்து துதித்தான். விக்கினேசுவரர் அவனைப் பூமியில் விடுத்து, "உனது குற்றத்தை யாம் பொறுத்தோம்; உனது இருபது கரங்களாலும் பத்துச் சிரசுகளிலும் குட்டுதி" என்று திருவாய்மலர்ந்தருளினர். இராவணன் குட்டிக்கொண்டு, ஆனந்தக்கூத்தாடி விநாயகக்கடவுளை உவப்பித்தான். விநாயகமூர்த்தி கிருபாநோக்கஞ்செய்து. "என்னுடைய திருவருளை விரும்பி,

உன்னைப்போல இருகரத்தாலும் தம்முடைய சிரசிற் குட்டி வணங்கியவர்பால் மகிழ்ச்சி செய்வோம்'' என்றுசொல்லி மறைந்தருளினர். இராவணன் இலங்கையை அடைந்தான்.

---

## உ. ஸ்ரீராமபிரான் சிவபூசை செய்தது.

இராமபிரான் இலங்கைக்குப் போகும்பொருட்டு மதுரையில் வந்து இடபமலைமீது தங்கினர். அகத்தியமகாமுனிவர் அங்கே வந்து, அவருக்குச் சோமசுந்தரக் கடவுளுடைய மான்மியத்தை உபதேசித்தருளினர். இராமர் அவ்வுபதேசத்தைக்கேட்டு, கடவுளைச் சிவாகமவிதிப்படி பூசித்து "அடியேன் எண்ணிய காரியங்கள் சித்தியெய்தும்பொருட்டு அருள் செய்யும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் அவருக்குக் கிருபை செய்தருளினர்.

கடவுளுடைய பூரணகிருபையைப்பெற்ற இராமர் சமுத்திரத்தில் சேதுபந்தனம் செய்து, அவ்வழியாக இலங்கையில் வந்து இராவணனைக் கொன்று சீதையைச் சிறையினின்று மீட்டார். முனிவர்களும் தேவர்களும் இராமரது வெற்றியைக் குறித்துப் பெருஞ்சந்தோஷங் கொண்டார்கள். அப்பொழுது இராமர் புஷ்பவிமானத்தில் ஏறிச் சேனைகளோடுங் கந்தமாதனத்துக்குப் போனர். தண்டகாரணியத்தில் இருந்த முனிவர்கள் வந்து இராமபிரானைச் சேர்ந்தார்கள். "வீரரே உம்முடையபாதங்களுக்கு அடியேங்கள் அபயமாயினம்; எங்களை என்றும் பாதுகாத்தருளவேண்டும்'' என்று வணங்கினர்கள். இராமர் தபோதனர்களைப் பார்த்து, அன்பர்களே! இராவணனை வதைத்த பாவம் நீங்கும்படி நீங்கள் ஒரு பரிகாரம் சொல்லுங்கள்'' என்றார். முனிவர்கள் "தசரத குமாரரே! நீர் கூறியது நன்று. உமாதேவிபாகராகிய சிவபெருமானை இந்தக் கந்தமாதனத்தில் பிரதிட்டை செய்யக்கடவீர். உமக்கு வந்த குற்றமெல்லாம் நீங்கும்'' என்று கூறினர்கள். கோசலைகுமாரர் மனம் மிகமகிழ்ந்து, அநுமானைப்பார்த்து, "நீ வடகைலைக்குப்போய், சிவலிங்கமூர்த்தம் கொண்டுவரக்கடவாய்'' என்று கட்டளையிட்டார்.

அனுமான், திருக்கைலாசகிரியிற்போய், சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து, சிவலிங்கத்தைப் பெற்றான். அநுமானுடைய செய்கை இவ்வாறாக, முனிவர்கள் இராமரது முகத்தைப் பார்த்து, "முகூர்த்தம் வந்துவிட்டது, சீதை மண்ணாற்செய்த இலிங்கத்தைத் தாபிப்பீராக" என்றார்கள். இராமர் ஆனிமாதத்தில், அத்தநக்ஷத்திரத்தில், சைவாமகவிதிப்படி சிவலிங்கத்தைச்சேதுவில் தாபித்தார். சுவாமிக்கு அபிஷேகஞ்செய்யும்படி தமது வில்லின் கோடியினாலே ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினார். நந்திதேவரையும் பிரதிட்டைசெய்தார். பஞ்சகவ்வியம், தேன், கனிகள் முதலிய திரவியங்களினாலே அபிஷேகித்துப் பூசையை முறையாகச்செய்தார். மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து, கண்களினின்றும் ஆனந்த அருவி சொரிய வணங்கி நின்றார். சிவபெருமான் உமாதேவியாரோடுந் தோன்றி, "இராகவனே! நீ உண்டாக்கிய தனுக்கோடி தீர்த்தத்தினால் நம்மை அபிஷேகித்து, தரிசிப்போரும், அத்தீர்த்தத்தில் முழுகுவோரும் பாவம் நீங்கி முத்தியடைவார்கள். இது உண்மை" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அப்பொழுது அனுமான் திருக்கைலாசமலையினின்று சிவலிங்கத்துடன் கந்தமாதனத்தைச் சேர்ந்தான். சீதை மண்ணாற்செய்த இலிங்கத்தில் இராமர் பூசைபண்ணியதைப் பார்த்து, "யான் வருந்தியது வீணாய்விட்டதே" என்று வெம்பிக் கோபங்கொண்டான். கண்களினின்றும் நீர் ததும்ப இராமரை நோக்கிக் கூறுவானாயினன். "இங்கே பலர் இருப்பவும், சிவலிங்கங் கொணரும்படி எனக்குக் கட்டளையிட்டது என்னை இகழுதற்கோ? உமது திருவுள்ளத்தை அறியேன். சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்தமையினால் உடம்பு வாடப்பெற்றேன். அக்கடவுளும் இரங்கி இலிங்கந் தந்தார். அதை யான் விரைந்து கொண்டுவந்தேன். நீர் அதற்குமுன், மணலாலாகிய இலிங்கத்தைப் பிரதிட்டைசெய்தீர். யான் இனிச்செய்வது என்னை? முற்பிறவியில் தவஞ்செய்யாதவன் ஒன்றை முயலும்பொழுது அது முற்றப்பெறாது, அதுவுமன்றிக் குற்றமும் வந்துசேரும் என்று நூல்கள் கூறுவது என்னளவிலே பலித்துவிட்டது." அனுமான் இப்படிப் பலவாறு சொல்லி ஏங்கி, இராமரது முன்னிலையில் விழுந்து மண்ணிற் கிடந்தான். இராமபிரான் "நீ சோகிப்பது தகுதியன்று. இது மண

Sarojini Devi



வேற்றுமையால் வந்ததன்று. முகூர்த்தம் வந்தமையால் சீதை செய்த இலிங்கத்தைப் பிரதிட்டைசெய்தோம். இது உண்மை. உன்னை இகழ்ந்து இது செய்தது என்று சீற்றங்கொள்ளாதே. நீ கொண்டுவந்த இலிங்கத்தை நல்லமுகூர்த்தத்தில் தாபிக்குதி. யான் பிரதிட்டை செய்த இலிங்கம் பாதாளத்தை ஊடுருவி நிற்பதால் அதை அசைக்கமுடியாது'' என்று கூறினார். அனுமான் இராமநாத இலிங்கத்தைப் பெயர்த்துவிட்டுத் தான்கொணர்ந்த இலிங்கத்தைத் தாபிக்க விரும்பி, அதைப்பிடித்து அசைத்தான். அணுவும் அசையவில்லை. தோளை நிலத்தில் ஊன்றி, இராமநாத இலிங்கத்தை வாலினாற்சுற்றி மேலே எழுந்தான். இலிங்கம் சிறிதேனும் பெயர்ந்திலது, ஒரு கூப்பிடுதூரம்போய் விழுந்தான். அவனது செவி வாய் முதலிய உறுப்புக்களினின்று, இரத்தம் பெருகிக் குளமாகியது. மணலாலாகிய இலிங்கத்தை அசையாதபடி நிறுத்திய இராமமூர்த்தியை எல்லோரும் புகழ்ந்தார்கள்.

இராமர் அனுமானைப்பார்த்து, "நீ யாதுசெய்தாய்; எங்களோடு யுத்தஞ்செய்த அரக்கன் திருக்கைலாசமலையை வலிமையினாற் பெயர்த்துப் பட்டபாட்டை அறியாயோ? சிவபெருமானுக்குச் செய்த இந்த அபராதத்தினால் சரீரம் சோர்வடைந்து விழுந்தாய். இனி எம்பெருமானுக்கு ஒருகாலும் பிழைசெய்யாதே. நீ தாபிக்க முயன்றதும் அவருடைய அருட்குறியையேயாதலினால், உனது குற்றத்தைச் சிவபெருமான் பொறுத்தருளுவர். நீ விழுந்ததினால் உண்டாகிய குழி ஒரு சிறந்த தீர்த்தமாக விளங்கக்கடவது" என்று கூறினார். இதனை அனுமான் கேட்டு மகாசந்தோஷங்கொண்டு, இராமநாதருக்கு வடதிக்கில் தனது இலிங்கத்தைத் தாபனஞ்செய்தான்.

இராமநாத லிங்கத்தில் அனுமான் சுற்றிய வலயங்களை மேனாள்போல இன்றும் காணலாகும்.

---

## ரு. பலராமர்.

### 1

ஒருநாள் கிருஷ்ணரும் பலராமரும் இடைச்சிறுவர்களும் மாடுமேய்த்துக்கொண்டு ஒருகாட்டை அடைந்தார்கள். அக்காட்டுக்குச் சமீபத்திலே உள்ள ஒரு பனந்தோப்பில் தேனுகன் என்னும் அரக்கன் கழுதையின் வடிவாய் இருந்தான். அவனோடு வேறும் அரக்கர்கள் கழுதைவடிவாய் வசித்துவந்தார்கள். அக்கழுதைகளுக்குப் பயந்து அக்காட்டில் மனிதர்கள் பிரவேசிப்பதில்லை. அங்கே பனம்பழங்கள் நன்ருய்ப் பழுத்து மணம் வீசிக்கொண்டிருந்தன. இடைச் சிறுவர்கள் இராமகிருஷ்ணர் இருவரையும் நோக்கி, "இப்பனந்தோப்பில் இருக்கும் பழங்களை யாம் உண்ண விரும்புகின்ருேம். தேனுகன் என்னும் அரக்கன் அங்கே வசிக்கிருன். பனம்பழங்களை உண்ணும்படி சென்ற அனேகர் அவனுக்கு இரையானுர்கள். இவ்வசுரனை நீங்கள் அழித்துவிடுவீர்களாயின், நாங்கள் அப்பழங்களை விரும்பியபடி புசிக்கலாம்" என்றுகூறினுர்கள்.

உடனே பலராமரும் கிருஷ்ணரும், அத்தோப்பினுள்ளாகப் போய், பனைமரங்களை அசைத்துப் பழங்களை உதிர்த்தினுர்கள். இப்படி இருவரும் பழங்களைஉதிர்க்க, அவை நிலத்தில்விழுகின்ற சத்தத்தைக்கேட்டு, அத்தோப்பில்இருந்த தேனுகன் கழுதைவடிவாகிவந்து, பலராமருடைய அருகிற் சென்று, பின்னங்கால்களினுல் அவரது மார்பில் உதைத்தான். அக்கழுதையைப் பலராமர்கைகளாற்றூக்கிச்சுழற்றி, ஒரு பனையின்மீது எறிந்தார். பனம்பழங்கள் உதிர்ந்தன. அசுரனும் புலம்பிக்கொண்டு,விழுந்து இறந்தான். அவனுடைய சுற்றத்தவர்களாகிய அசுரர்கள் ஒவ்வொருவரும் கழுதையுருக்கொண்டு வந்தார்கள். கிருஷ்ணரும் பலராமரும் அக்கழுதைகளைக் கால்களிற்பிடித்துத் தூக்கி மரங்களில் எறிந்தார்கள். பனங்காய்கள்விழுந்தன. கழுதையுருக்கொண்டு வந்த அரக்கர்களும் இறந்து விழுந்தார்கள். எல்லோரும் பனம்பழங்களைப் புசித்து மகிழ்ச்சியடைந்து, இராமகிருஷ்ணர் இருவரையும் துதித்தார்கள்.

## 2

வேறொருநாள், இராமகிருஷ்ணர் இருவரும் பாண்டீரம் என்னும் ஆலமரத்தடியிற் சென்று, தோளில் அணைகயிறும் மாலையும் அணிந்தவர்களாய், ஒவ்வொரு மாடுகளையும் அவைகளின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு மேய்த்தார்கள். மரத்தின் விழுதுகளை ஒன்றோடொன்று முடிந்து, அதிலிருந்து ஊசலாடினார்கள். மல்யுத்தஞ் செய்தார்கள். கற்களைச் சுழற்றி எறிந்தார்கள். இப்படி விளையாடியவர்கள் வேறொரு விளையாட்டுத் தொடங்கினார்கள். அந்தவிளையாட்டில் தோற்றவர்கள் வென்றவர்களைத் தோள்மீது வைத்துச் சுமந்துகொண்டு பாண்டீரம் என்னும் ஆலமரம் வரையிற் போய்த் திரும்பி வரவேண்டும் என்று நிபந்தனைசெய்தார்கள்.

பலராமரைக் கொல்லுவதற்காக ஆயச்சிறுவன் போல் வந்த பிரலம்பன்என்னும் அரக்கன் "என்னையும் ஆட்டத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று விளையாடிக்கொண்டு நின்ற சிறுவர்களைக் கேட்டான். எல்லாரும் அதற்கு உடன்பட்டார்கள். அரக்கனும் பலராமரும் விளையாடினார்கள். அரக்கன் தான் தோற்றதுபோலக் காட்டிப் பலராமரைத் தன்னுடைய தோளின்மீது ஏற்றிக்கொண்டு, விரைவாகப் போனான். அரக்கன் செய்யும் வஞ்சனையை அறிந்த பலராமர் தமது உடலை மிகப்பாரமாக்கினார். அப்பாரத்தைச் சுமக்கமாட்டாமல் பிரலம்பன் தனது உடம்பையும் பெரிதாக்கினான். அப்பொழுது பலராமர் தம்பியைப் பார்த்து "கிருஷ்ணா, இவனோர் அரக்கன்; இப்பொழுது நான் செய்யவேண்டியதைச் சொல்" என்றார். கிருஷ்ணர் "இவனைச் சங்கரித்து நமது பந்துக்களுக்கு இதம் செய்தல்வேண்டும்" என்றார்.

பலராமர் உடனே அவ்வரக்கனுடைய கழுத்தில் இடித்தார். அரக்கன் கபாலம் உடைந்து கீழேவிழுந்து இறந்தான். இடையர்களும் பிறரும், பிரலம்பன் இறந்ததுகண்டு, மகாசந்தோஷங்கொண்டு இராமரை வியந்துதுதித்தார்கள்.

3

பலராமர் பாரதப்போர் தொடங்கியநாளில் வஞ்சகமாகிய யுத்தத்தைக் காண்பதற்கு மனம் பொறாதவராய், தீர்த்தயாத்திரை செய்யத்தொடங்கினார். சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற ஆலயங்கள் எங்கும்போய் வணங்கினார். காஞ்சிபுரத்தை அடைந்து சிவதீர்த்தங்களில் முறைப்படி ஸ்நானஞ்செய்து, ஏகாம்பரநாதரை அருச்சித்து வணங்கினார். அந்நகரத்தில் எழுந்தருளியிருந்த உபமன்னியுமகாமுனிவரை வணங்கித் தொண்டு செய்து ஒழுகினார். அம்முனிவரால் சிவதீக்ஷை செய்யப்பெற்றுச் சிவபூசைபண்ணி வருவாராயினார். சிவபெருமான் கருணைகூர்ந்து, உமாதேவிசமேதராய் இடபவாகனத்தின்மீது தோன்றியருளினார். பலராமர் சாட்டாங்கமாக விழுந்து கும்பிட்டுத் தோத்திரம் செய்தார். "உனக்குவேண்டிய வரங்களைக் கேட்குதி" என்று சிவபெருமான் கூறியருளினார். பலராமர் சந்தோஷத்தினால் சரீரத்தில்உள்ள ரோமங்கள் சிலிர்க்கப்பெற்று, "எம்மை அடிமையாக உடையவரே! தேவரீருடைய திருவடித்தாமரைகளில் அடியேனுக்கு இடையறாத அன்பைத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அவ்வரங்களைக்கொடுத்து மறைந்தருளினார். பலராமர் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு யோகானுபவமுடையவராய் இருந்து, அவதார முடிவில் தமது வைகுந்த உலகத்தை அடைந்தார்.

---

## ௬. கிருஷ்ணர்.

1

சந்திரவமிசத்திலே, யாதவர்குலத்திலே, சூரசேனன் என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் வடமதுரையை இராசதானியாகக் கொண்டு, அரசாட்சிசெய்தான். அவனுக்கு வசுதேவர் என்னும் ஒரு புதல்வர் இருந்தார். வசுதேவர் உக்கிரசேனராசனுக்குத் தம்பியாகிய தேவகன் என்பவனுடைய புத்திரியாகும் தேவகியை விவாகஞ்செய்தார். அவர், மணஞ்செய்தநாளில், உக்கிரசேனனுடைய புத்திரனாகிய கஞ்சன்

S. Sarojini Devi

# கிருஷ்ணர்.

தேர்செலுத்த, ஊர்வலம் வந்தார். அப்பொழுது "கஞ்சனே,
தேவகியினுடைய எட்டாவது புத்திரன் உன்னைக்கொல்லுவான்"
என்று ஒரு அசரீரிவாக்கு உண்டாயது. அவன் அதைக்கேட்டுக்
கோபங்கொண்டு, தனது சகோதரியை வெட்டுவதற்காக வாளை
எடுத்தான். வசுதேவர் கஞ்சனைப்பார்த்து "பெண்களைக் கொல்
லுதல் பெரும் பழியாகும்; உனது தங்கை என்பதனால் கோ
பந் தணியக்கடவாய்; இவளிடத்தில் உதிக்கும் ஒவ்வொரு மக
வையும் உன்னிடம் ஒப்பிப்பேன்" என்று பணிந்து சொல்லித்
தன் மனைவியின் உயிரைக் காப்பாற்றினார். கஞ்சன் அதற்கு
இசைந்து, தேவகியையும் வசுதேவரையும் சிறைப்படுத்தித் துன்
பஞ்செய்தான்.

விஷ்ணுமூர்த்தி, வசுதேவர் முதலியோர் கஞ்சனால் அடை
யுந் துன்பங்களை நீக்கத் திருவுள்ளங் கொண்டார். அவர் மா
யையை நோக்கி, "இரணியன் என்னும் அசுரனுடைய மைந்
தர்கள் அறுவரையும் ஒவ்வொருவராகக்கொணர்ந்து, தேவகிக்
குப் புதல்வராய்ப் பிறக்குமாறு சேர்க்குதி; அதன்பின், தே
வகி ஏழாவது கருப்பம் பிரசவித்தற்குமுன், அதனை அவள்
வயிற்றினின்றும் எடுத்துச்சென்று வசுதேவருடைய மற்றை
மனைவியாய், கருப்பவதியாயிருக்கும் உரோகிணி வயிற்றில்
வைக்குதி; என்னுடைய கலைகளுள் ஒன்று தேவகியினுடைய
எட்டாவது கருப்பமாக வந்து உதிக்கும். நீயும் யசோதைக்
குப் புதல்வியாகப் பிறக்குதி" என்றுசொல்லி விடைகொடுத்து
அனுப்பினார். இந்நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் நாரதமுனிவர்
கஞ்சனுக்குச் சொன்னார். அவன் மிகக் கோபங்கொண்டிருந்
தான். வசுதேவரும் தேவகியும் சிறையில் இருக்குங்காலத்தில்,
ஆறு பிள்ளைகளைப்பெற்றார்கள். கஞ்சன் அப்பிள்ளைகளைக் கல்லில்
அடித்துக்கொன்றான்.

தேவகி ஏழாவது கருப்பங்கொண்டாள். மாயை அக்கரு
வைத் தன்னுடைய புணர்ப்பினாலே எடுத்துச் சென்று, ஆயர்பா
டியில் இருந்தஉரோகிணி வயிற்றில்வைத்தது. உரோகிணி வெண்
மைநிறம் பொருந்திய வலிய ஒரு புத்திரரைப் பெற்றாள். தேவகி
ஆவணிமாதத்தில், அபரபக்கமும், அட்டமித்திதியும், உரோகிணி
நக்ஷத்திரமும், புதன்கிழமையும் பொருந்திய அர்த்தயாமத்தில்

ஒரு புத்திரரைப் பெற்றாள். சங்கு, சக்கரம், வாள், தண்டு, வில் என்னும் பஞ்சாயுதங்களையும் தாங்கி, கருநிறமுடையராய்த் தோன்றிய அச்சிறுவரைப் பிதாநோக்கி, "நாராயணரே நமக்குப் புத்திரரானார்" என்று உணர்ந்து, நமஸ்காரஞ்செய்தார். அப்பொழுது அப்புத்திரர் மானிடக்குழந்தையின் வடிவுகொண்டு, பிதாவைநோக்கி, "என்னை ஆயர்பாடியிற் கொண்டுபோய், நந்தகோபனுடைய இல்லத்தில்விடுத்து, யசோதைபெற்ற மாயையாகிய பெண்குழந்தையை எடுத்துவருக" என்றுகூறினார். கூறுதலும், வசுதேவர் விஷ்ணுவினுடைய கிருபையினாலே விலங்கு நீங்கப்பெற்றார். சிறைச்சாலைக்கதவு திறக்கப்பட்டது. அவர் குழந்தையுடன் விரைந்துசென்று, யமுனாநதிக்கரையையடைந்தார். ஆறு வழிவிட்டுக்கொடுத்தது. அவ்வழியாக இரவிலே நந்தகோபருடைய மனையை அடைந்தார். யசோதைபெற்ற மாயையாகிய குழந்தையின் சூழ்ச்சியினால், அவர்களும், அவர்களுடன் இருந்த பெண்களும் உறங்கினார்கள். வசுதேவர் தம்முடைய குழந்தையை யசோதைபக்கலாகக் கிடத்தி, அவள்பெற்ற பெண்குழந்தையை எடுத்துக்கொண்டு, விரைவில் மதுரையை நோக்கிச்சென்றார். சென்று காவற்சாலையிற்புகுந்து, அக்குழந்தையைத் தேவகி கையிற்கொடுத்தார். உடனே அவர் பாதங்களில் விலங்குகள் பூட்டப்பட்டன. கதவு தானாகவே பூட்டப்பட்டது. மாயை அழுதது. அதனைக்கேட்ட காவலாளர்கள் கஞ்சனுக்குக் கூறினார்கள். அவன் விரைந்துவந்து, தேவகியின்மனங்குழையும்படி அக்குழந்தையை அவள்கையிலிருந்து பறித்தெடுத்து, நிலத்தில் அடித்தான். அடித்தபொழுது மாயை கஞ்சனுடைய கரத்தினின்றும் விலகி, அவன் மார்பில் உதைத்தது. பின்பு மேலாகப்போய், "மூடா! உன்னைக்கொல்பவன் வேறிடத்தில் வளர்கின்றான்" என்றுகூறிச் சென்றது. அதுகேட்ட கஞ்சன் மந்திரிமார்களோடு யோசித்தான். மந்திரிமார்கள் அவனைநோக்கி, "ஒருசிறுவன் உம்முடைய ஆன்மாவைப் பருகுவான் என்று மாயை கூறியதனால், இத்தேசத்தில் பிறந்து ஒரு மாதத்துக்குட்பட்ட சிறுவர்களைக் கொல்லுதல் தகுதியாகும்" என்று துர்ப்போதனை செய்தார்கள்.

கஞ்சன் வெஞ்சினத்தோடும் பூதனை முதலிய பேய்ப்பெண்களை நோக்கி, "நீங்கள் இவ்வுலகிற் பிறந்து ஒருமாதத்துக்குட்பட்ட குழந்தைகளைக் கொலைசெய்யுங்கள்" என்று ஆஞ்ஞாபித்

தான். பூதனை மாறுவேடம்பூண்டு, சில வீடுகளுக்குச் சென்றாள். அங்கே உள்ள குழந்தைகளைக் கொலைசெய்துவிட்டு, ஆயர்ப்பாடியை அடைந்து யசோதைவீட்டுக்குச் சென்றாள். சென்ற வஞ்சகி தொட்டிலில் விளையாடிக்கொண்டு கிடந்த அக்குழந்தையில் அன்புடையவள்போலத் தூக்கி, மடியில்வைத்து முத்தமிட்டுத் தனது விஷப்பாலை ஊட்டினாள். கிருஷ்ணர் பூதனையைப்பார்த்துச் சிரித்து, அவளுடைய பாலுடன் உயிரையும் உண்டார். பூதனை புலம்பிக்கொண்டு, விழுந்து இறந்தாள். யசோதை தனது குழந்தை ஒரு துன்பமுமின்றி இருத்தலைக்கண்டு தூக்கிப் பல திருட்டிதோஷபரிகாரங்களைச் செய்து மகிழ்ந்தாள். நந்தகோபன் சிறுவரது நெற்றியில் விபூதிபூசிக் காவல்செய்தான்.

ஒருதினம் அச்சிறுவரைக் கொல்லும்படி கஞ்சன் ஒரு அசுரனை அனுப்பினான். அவன் பணிகாரம் ஏற்றப்பட்ட வண்டிவடிவெடுத்துக்கொண்டு வந்து, அவர் படுத்திருந்த தொட்டிலைச் சமீபித்தான். அப்பொழுது சிறுவர்விளையாடுபவர்போன்று தமது காலைத்தூக்கி, உதைத்தார். உடனே வண்டிமுரிந்து, வெறுந்துகளாயது. சகடாசுரன் இறந்தான். சிறுவர் சிரித்து விளையாடிக் கொண்டு கிடந்தார்.

மைந்தர்கள் இருவரும் இடையர்சேரியை மகிழ்வித்து வளர்ந்தார்கள். வளரும்நாளிலே, கர்க்கர் என்னும் பிராமணர் வந்து உரோகிணியின் புத்திரருக்குப் பலராமர் என்று பெயரிட்டார். யசோதையின் புதல்வருக்குக் கிருஷ்ணர் என்று பெயரிட்டார்.

---

## ரு. கிருஷ்ணர்.

## 2

கஞ்சன் ஒருநாள், கிருஷ்ணரைக்கொல்லும்படி திருணவருத்தன் என்னும் அசுரனை அனுப்பினான். அவன்சுழல்காற்றுவடிவமாய்ச் சென்று கிருஷ்ணரைத் தூக்கிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் போனான். போனபொழுது கிருஷ்ணர் அவனைத் தலைகீழாகப் பூமியில்விழுத்திக் கொன்றார். சுழல்காற்றுநின்றுவிட்டது. கிருஷ்ணர் அசுரனுடையசரீரத்தில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தார். அதைக்கண்டு இடைச்சியர்கள் ஓடிப்

போய், அவரை எடுத்துக்கொண்டு சென்று, புத்திரனைக் காணாமல் வருந்திக்கொண்டிருந்த யசோதைகையிற் கொடுந்தார்கள்.

கிருஷ்ணர் தவழும்பொழுதில், மண்ணைக்கையால் அள்ளி உண்டார். அதனைக்கண்டதாய் ஓடிவந்து அடித்தாள். கிருஷ்ணர் அழுதார். அப்பொழுது யசோதை அவருடைய வாயினுள்ளாக எல்லா உலகங்களையுங்கண்டு, அவரை விஷ்ணு என்று நினைத்து வணங்கினாள்.

சரசுவதிஆற்றங்கரையில் இருக்கும்சிவாலயத்தில் திருவிழா நடந்தது. கிருஷ்ணரும் பலராமரும் ஆலயத்துக்குச் சென்று சுவாமிதரிசனஞ்செய்து, அடியார்களுக்குத் திருவமுதுசெய்வித்துத் தமதுவீட்டை அடைந்தார்கள்.

ஒருதினம் நந்தகோபன் இந்திரனைக்குறித்து, விழாச்செய்யத் தொடங்கினான். கிருஷ்ணர் பிதாவைப்பார்த்து, "ஐயா! நீங்கள் யாரைக்குறித்துப் பூசைசெய்யத் துணிந்தீர்கள்?" என்று வினவினார். நந்தகோபன் "புத்திரனே! இந்திரனைக்குறித்துப் பூசை செய்யுமாறு துணிந்தேன்" என்றான். கிருஷ்ணர் "அவ்விழாவை இந்திரனுக்குச் செய்வது தகாது; பசுக்களைப் பாதுகாக்கும் கோவர்த்தனமலைத் தலைவனுக்கே செய்யுங்கள்" என்றார். அதைக் கேட்ட நந்தகோபன் அவருடைய மனம்மகிழுமாறு, நெய், தயிர், பால், அன்னம் முதலியவைகளைப்படைத்து, கோவர்த்தனகிரிக்கு விழாவைச்செய்தான். கிருஷ்ணர் அம்மலையை அடைந்து, படைக்கப்பட்ட அன்னம், தயிர் முதலியவைகளை வாரி உண்டார். கிருஷ்ணர் உண்ணுவதை இந்திரன் அறிந்து கோபங்கொண்டு, முகில்களை அனுப்பினான். முகில்கள் ஏழுநாள்வரை இடைவிடாது கற்பிரமாணமாக மழைபெய்தன. இடையர்கள் மிகப் பயந்து கிருஷ்ணரைச் சேர்ந்தார்கள். பசுக்கள் கிருஷ்ணரைப் பார்த்துக் கதறின. கிருஷ்ணர் கோவர்த்தனகிரியைப் பெயர்த்தெடுத்துக் குடையாகப்பிடித்துப் பசுக்களைப் பாதுகாத்தார். இடையர்களும் அக்கிரியின் அடியிற்சென்று நின்றார்கள். இந்திரன் பூமியில் வந்து கிருஷ்ணரைப் பூசித்து, "இன்று தொடக்கம் உம்முடைய பெயர் கோவிந்தன் என்று வழங்கக்கடவது" என்று சொல்லிச் சென்றான். முகில்கள் விலகின. ஆயர்கள் அவரைப் பணிந்து, புகழ்ந்து நின்றார்கள்.

கஞ்சன் ஒருநாள் கிருஷ்ணரையும், பலராமரையும் கொல்வதற்காகத் தநுர்யாகஞ்செய்ய நினைத்தான். அக்குரூரர் என்பவரை அழைத்து, "யாகஞ்செய்யுந் தினத்தைக் கிருஷ்ணருக்கும், பலராமருக்கும், நந்தருக்குஞ் சொல்லி அவர்களை அழைத்துவாரும்" என்று கட்டளையிட்டான். அக்குரூரர், நந்தகோபனுடைய மனையை அடைந்து, கண்ணபிரானையும், பலராமரையும், நந்தனையுங்கண்டு அவர்களைத் தழுவி, தாம் வந்தமையைக் கூறினர். அவர்கள் அக்குரூரருடன் கஞ்சனுடைய யாகசாலையைச் சேர்ந்தார்கள். கிருஷ்ணர் ஒருபெரிய வில்லு அங்கே வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அதை எடுத்து வளைத்து முரித்தார். அவ்வில்லைக் காவல்செய்த வீரர்கள் எதிர்த்தார்கள். கிருஷ்ணரும் பலராமரும் அவர்களைக் கொன்று, அரண்மனை வாசலைக் கிட்டினார்கள்.

பத்திரன் என்பவன் கஞ்சனுடைய கட்டளைப்படி குவலயாபீடம் என்னும் யானையை ஏவினன். யானை கோபத்துடன் கண்ணபிரானுக்கருகில் வந்து, கொம்புகளாற்குத்திக் கால்களால் இடறியது. கிருஷ்ணர் அந்த யானையை மத்தகமுடையும்படி கையால்குத்தி, வாலிற்பிடித்துச் சுழற்றினர். துதிக்கையிற்பிடித்து, நிலத்தில் விழுத்தி தமதுகாலால் மிதித்து ஒரு கொம்பைப் பிடுங்கினர். பிடுங்கிய கொம்பினலே, பத்திரனுடைய மூளைசிதறும்படி அடித்துக் கொன்றார். பின்பு அக்கோட்டைத் தமது தோளில்வைத்துக்கொண்டு, சபையை அடைந்தார். பலராமர் அந்த யானையினது மற்றைக்கொம்பைப் பிடுங்கித் தமது புயத்தில்வைத்துக்கொண்டு, அவையிற்சென்றார். அப்பொழுது சாணூரன் என்பவன் கிருஷ்ணருடனும், முட்டிகன் என்பவன் பலராமருடனும் மல்யுத்தஞ்செய்து மாண்டார்கள். இன்னும் பல வீரர்கள் வந்து நெருங்கினர்கள். கிருஷ்ணரும் பலராமரும் அவர்களைக் கொன்றார்கள்.

கண்ணபிரான் கஞ்சனுடைய சிங்காசனத்திற் பாய்ந்தார். கஞ்சன் தனது வாளையுருவிக்கொண்டு, கிருஷ்ணருடன் எதிர்த்தான். கிருஷ்ணர் கஞ்சனுடைய கழுத்தை ஒரு கரத்தாற் பிடித்து, நிலத்தில் விழுத்திக் கொன்றார். கஞ்சன் கிருஷ்ணரைக் கண்டும், அவரால் தீண்டப்பட்டும், இறந்தமையால் விஷ்ணு

லோகத்தை அடைந்தான். கஞ்சனுடைய தம்பிமார்களாகிய எண்மரும், கோபித்து வாளைச்சுழற்றிக்கொண்டு சென்றார்கள். பலராமர் சிரித்து தாம்கொணர்ந்த யானைக்கோட்டால் அவர்களை அடித்துக் கொன்றார். இராமகிருஷ்ணர்கள் தேவகியையும் வசுதேவரையும் சிறையினின்றும் நீக்கி வணங்கினார்கள். அவர்கள் புத்திரர்களைத் தழுவிச் சந்தோஷம் அடைந்தார்கள். கிருஷ்ணர் உக்கிரசேனனையும் சிறை நீக்கி, யாதவர்களுக்கு அரசனாக முடிசூட்டினார். வசுதேவரை அவனுக்கு மந்திரியாகஇருக்கும்படிசெய்தார். பின்பு கிருஷ்ணர் பலராமரோடு இராமேசுரம் போய் இராமநாதரைத் தரிசித்தார். அத்தரிசனபலத்தால், கஞ்சனைச் சங்கரித்த பாவம் அவரை விட்டு நீங்கியது.

---

## சா. பகீரதராசன்.

சூரியவமிசத்தவனாகிய பாகுராசன் என்பவன் அயோத்திநகரை அரசுசெய்திருந்தான். அவனுக்கு இரண்டுமனைவியர்கள் இருந்தார்கள். மூத்தமனைவி கருப்பவதியாயினாள். இளையமனைவி பொறாமைகொண்டு அவளுக்கு உணவுடனே விஷத்தை ஊட்டினாள். விஷத்துடன் பேரழகுடைய ஒரு புத்திரன் பிறந்தான். நஞ்சுடன் கூடப்பிறந்தமையால் அவனுக்குச் *சகரன் என்று பெயரிட்டார்கள். சகரன் அசுவமேதயாகஞ் செய்ய விரும்பி, சிறந்த ஒரு குதிரையை அலங்கரித்து, உலகத்தை வலம்வரும்படி அனுப்பினான். இந்திரன் வஞ்சனையாக அக்குதிரையைப் பிடித்துக்கொண்டுபோய், பாதாள உலகத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த கபிலமுனிவருக்குப் பக்கலாக ஒரு மரத்திற் கட்டினான்.

சகரன் அக்குதிரையைத்தேடிப் பிடிக்கும்படி தனது புத்திரர்கள் அறுபதினாயிரவருக்கும் கட்டளையிட்டான், அவர்கள் பூவுலகம் முற்றுந் தேடிக் காணாதவர்களாய், பாதாள உலகஞ்சென்று, கபிலமுனிவர் பக்கலாகக் கட்டியிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் இத்திருட்டிற்குக்காரணம் இம்முனிவனே என்று கோபித்து, அவருக்குத் துன்பஞ்செய்தார்கள். முனிவருடைய கோபாக்கினியினால் சகரபுத்திரர் அறுபதினாயிரவரும் சாம்பரா

* ச - கூட, கரம் - நஞ்சு.

னார்கள். அதைப் பிதா தனது தூதுவர்களால் அறிந்து, தனது ‡பௌத்திரனாகிய அஞ்சுமான் என்பவனை நோக்கி "எனது புத்திரர்கள் இறந்தாலும் தொடங்கியயாகத்தை விடலாமா?" என்றான். அஞ்சுமான் பாதாளஉலகத்திற் போய், முனிவர் முன் கிடந்த சாம்பல்மலையைக் கண்டு நடுங்கி, அவரை வணங்கிக் குதிரையைத் தரும்படி கேட்டான். முனிவர் மனமகிழ்ந்து கொடுத்தார். அஞ்சுமான் பெற்றுக்கொண்டு பூவுலகத்தில் வந்து அதனை பிதா மகளிடத்தில் கொடுத்து, அவ்வியாகத்தை முடிப்பித்தான்,

அவனுடைய சந்ததியிற்றோன்றிய பகீரதராசன் தனது மூதாதையர்கள் கபிலமுனிவருடைய கோபாக்கினியினால் எரிந்துசாம்பலாய் நரகத்துன்பம் அனுபவிப்பதை அறிந்தான். அவன் அவர்களைச் சுவர்க்கம் அடைவிக்க விரும்பி, பிரமாவை நோக்கித் தவஞ்செய்தான். பிரமா தோன்றி "ஆகாயகங்கை அவர்களது அத்தியிற்பட்டால், சுவர்க்கம் அடைவார்கள்; அது முற்றுப் பெறுமாறு சிவபெருமானைத்தியானித்துத் தவஞ்செய்" என்று சொல்லி மறைந்தார். பகீரதராசன் சிவபெருமானையும் கங்கையையும் குறித்து, அனேககாலம் தவஞ்செய்தான். சிவபெருமான் காட்சிகொடுத்தருளினார். கங்கை ஆரவாரித்துக்கொண்டு மிக்க வேகத்துடன் வந்தது. அது உலகத்தை அழியாதபடி இரட்சித்தற்பொருட்டுச் சிவபெருமான் தமது திருச்சடையில் ஏற்றருளினார். கடவுளுடைய ஒரு மயிர் நுதியில் அது சிறுதுளிப் பிரமாணமாக மறைந்திருந்தது. பகீரதன் கங்கையைக் காணாதவனாய் வருந்திச் சிவபெருமானைத் துதித்தான். அவர் ஒரு சிறு திவலையைச் சடையிலிருந்து எடுத்துப் பூமியில் விட்டருளினார். அந்நதி பகீரதன்பொருட்டு இப்பூமியில் வந்தமையால் பாகீரதி என்னும் பெயரைப் பெற்றது.

பூமியில் விரைந்து பாய்ந்து செல்லுங் கங்கையின் வேகத்தால் ஜன்னுமுனிவரின் யாகசாலை அழிந்தது. அதைக்கண்ட முனிவர் அந்நீரை உள்ளங்கையில் அடக்கி ஆசமித்தார். பகீரதன் கங்கையைக் காணாதவனாய் வருந்தி, ஜன்னுமுனிவரை வணங்கி, முன் நடந்தவைகளை முறைப்படி சொன்னான். முனிவர் மனமி

‡ பௌத்திரன் - மகனுடைய மகன்.

ரங்கி, அந்நதியைத் தமது செவிவழியாக விட்டார். ஆகையால் அது ஜான்னவி என்னும் நாமத்தைப் பெற்றது. பாகீரதி பாதாள உலகத்திற்சென்று, எரிந்து கிடந்த சகரபுத்திரர்களுடைய சாம்பரிற் படிந்தது. நரகத்திற் கிடந்துவருந்திய அரசகுமாரர்கள் சுவர்க்கமடைந்தார்கள். பகீரதராசன் பெரும்புகழுடன் பூமியைப் பரிபாலித்தான்.

அக்காலத்தில் கோரன் என்னும் இராக்கதன் ஒருவன் சுவர்க்க உலகத்திற்போய், இந்திராதிதேவர்களை வென்றிகொண்டான். பூவுலகில்வந்து பகீரதனுடன் எதிர்த்தான். பகீரதனும் சேனைகளுடன்சென்று, எதிர்த்துயுத்தஞ்செய்து தோற்றான். கோரன் பகீரதனுடைய அரண்மனையிற்புகுந்து, எல்லாரையும் அடக்கி அரசாண்டான். பகீரதன் மனைவிமக்களுடன் காட்டையடைந்தான்.

அவர்கள் காட்டிலிருந்து சுப்பிரமணியக்கடவுளைத்தியானித்துச் சுக்கிரவாரவிரதத்தை விதிப்படி அனுட்டித்தார்கள். மூன்றுவது வருடத்தின் இறுதியிலே சுப்பிரமணியக்கடவுள் தோன்றியருளினர். அரசனும் மனைவிமக்களும் வணங்கித் துதித்தார்கள். முருகக்கடவுள் வேற்படையைச் செலுத்தியருளினர். வேற்படை கோரனுடைய உயிரையுண்டு திரும்பிவந்து சுப்பிரமணியக்கடவுளுடைய திருக்கரத்தில் வீற்றிருந்தது. பகீரதராசன் சந்தோஷமாக வீற்றிருந்தான்.

---

## எ. தனபாலன்.

குந்தளதேசத்திலே வைசியர் குலத்திலே தனபாலன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் வியாபாரஞ் செய்யும் பொருட்டு, எருதுகளின்மேல் மிளகுப்பொதிகளை ஏற்றிக்கொண்டு, காஞ்சீபுரத்தை நோக்கிச் சென்றான். செல்லுகின்ற வழியிலே விரிஞ்சைப்புரத்தில் தங்கினன். அங்குள்ளவர்களிற் சிலர் வழியில் வேட்டுவக் கள்வர் இருப்பதாக அறிவித்தார்கள். அதை வர்த்தகன் கேட்டு, நாம் இனித்திரும்பி எமதுஊருக்குப் போவோமாயின் முதலிலே குறையும்; இங்கேவிற்றாலும் முதலாகுமேயன்றி இலாபம் இல்லை; இனிக் காஞ்சீபுரத்துக்குச் சேர்வதும் மிக அரிதாகும் என்று நினைத்தான். விரிஞ்சேசுரருடைய

திருக்கோயிலின்முன் சென்று "சுவாமீ! அடியேன் கொண்டு வந்திருக்கும் இம்மிளகுப் பொதிகளை வேடர்கள் பறிக்காவண்ணம் தேவரீர் வழித்துணையாக வந்தால் பத்துமிளகுப் பொதிகள் தேவரீருடையனவாகும்" என்று பிரார்த்தித்தான். பின்பு அவன் தன்னுடைய இருப்பிடத்துக்கு வந்து நித்திரைசெய்தான்.

சிவபெருமான் அன்று இரவு அவனுடைய சொப்பனத்திலே தோன்றி "அன்பனே! காலையில் உனக்கு நல்ல வழித்துணைவரும்; நீ பொதிகளை ஏற்றிக்கொண்டு செல்லுவாயாக" என்று சொல்லி மறைந்தருளினர். மறுதினம் வர்த்தகன் எருதுகளின்மேல் பொதிகளையேற்றிப் புறப்பட்டான். சிவபெருமான் ஓர் குதிரையின்மேல் எழுந்தருளிவந்து வர்த்தகனைப்பார்த்து "நாம் உனக்கு வழித்துணையாக வருகின்றோம்" என்றுசொல்லி, அவனுக்குப்பின்னே நடந்து சிலகாததூரம் சென்று மறைந்தருளினர். அப்பொழுது அங்கேஇருந்த வேடுவர்கள் அவ்வர்த்தகனை வருத்தி அவனுடைய பொருள்களையெல்லாம் பறித்துக்கொண்டார்கள். அவனோடுவந்தவர்கள் எல்லோரும் பயந்து ஓடிப்போனார்கள். அப்பொழுது வர்த்தகன் சோர்வடைந்து, "விரிஞ்சைப்புரத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவரே! தேவரீர் அடியேனது கனவிலே தோன்றி அருள்செய்தமையாலன்றோ இவ்வனத்தில் வந்தேன். இங்கு எனக்குத்துணையாக வந்தவரும் மறைந்துபோயினர். இனித்தேவரீர் திருவருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது சிவபெருமான்வேடுவர்களையெல்லாம் அகப்படுத்தி, எருதுகளின் மேல் மிளகுப்பொதிகளையும் ஏற்றிக்கொண்டு, தாம் குதிரையின்மேல் இவர்ந்து முன்போல வந்தார்.

தனபாலச் செட்டியானவன் அக்கள்வரது நெற்றிகளில் விபூதி இருக்கக்கண்டு உபசாரஞ்செய்து வேண்டிய பொருள்களைக் கொடுத்து அனுப்பினன். பின் சிவபிரானகிய வேடரோடு காஞ்சீபுரத்தையடைந்து கூடாரமிட்டு அங்கே தங்கினன். சிவபெருமான் வணிகனைப்பார்த்து "அன்பனே! யாம் எமது ஊருக்குச் செல்லுகின்றோம். எம்மை மறந்துவிடாதே. எமது பெயர் மார்க்கசகாயர்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். வர்த்

தகன் மிளகுப்பொதிகளை உயர்ந்தவிலைக்கு விற்றான். அதிக இலாபத்துக்கு விற்கும் மகிழ்ச்சியினாலே சுவாமிக்குக்கொடுப்பதாகக் கூறிய பத்துப்பொதிகளையும் அவருக்குக் கொடாது விற்றுவிட்டான். மிளகு வாங்கிப்போனவர்கள் எல்லோரும் வீட்டில் மிளகைக் கொட்டிப்பார்த்தார்கள். பார்த்தபொழுது பயறுகளாய் இருக்கக்கண்டு செட்டியிடம் சென்று அவனைப் பழித்தார்கள். அதனைக்கண்ட தனபாலன் "இது என்ன மாயம்? நாம் விரிஞ்சேசுரருக்குத் தருவதாகச்சொல்லிய மிளகுப்பொதிகளை விற்றதனால் தோஷம் உண்டாய்விட்டது" என்று சொல்லி வருந்தினான். பின்பு சுவாமிக்குப் பதினொரு மிளகுப்பொதிகள் கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்தான். அப்பொழுது பயறுகள் மிளகுகளாய்விட்டன. அவனை எல்லோரும் உபசரித்தார்கள்.

சிவபெருமான் வர்த்தகனது கனவிலே தோன்றி, "நீ நமக்குக் கொடுத்த பதினொருபொதிகளையும் நமது அடியார்களுக்குக் கொடுப்பாயாக" என்று சொல்லி மறைந்தருளினார். சிவபெருமான் கூறியருளியபிரகாரம் வணிகன் மிளகுப்பொதிகளை அடியார்களுக்குக் கொடுத்தான். உடனே அம்மிளகுகள் நாகரத்தினங்களாயின. தனபாலன் காஞ்சிப்பதியை நீங்கி, விரிஞ்சைப்புரத்தைஅடைந்து, தனக்குக் கிடைத்த இலாபங்கள் முழுவதையும், கோயிற்றிருப்பணி முதலியவற்றுக்குச் செலவுசெய்தான். விரிஞ்சைப்புரத்தில் உள்ள பிரமதீர்த்தக்கரையில் சைவாகம விதிப்படி விநாயகரைப் பிரதிட்டைசெய்து வழிபட்டுப் பெருமகிழ்ச்சிபெற்றிருந்தான். இறுதியில் சிவபெருமானோடு இரண்டறக்கலத்தலாகிய சாயுச்சியபதவியை அடைந்தான்.

---

## அ. அகத்தியமுனிவர்.

அகத்தியமகாமுனிவர் பொதியமலையில் வசித்தருளுபவர். சிவபெருமானிடத்தும் முருகப் பெருமானிடத்தும் தமிழ்மொழியைக்கற்றவர். இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கணங்களையும் விரித்து விளக்கி, அகத்தியம் என்னும் இலக்கணநூல் செய்தவர். தலைச் சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் வீற்றிருந்து தமிழாராய்ந்த தலைமைப்புலவர். தொல்காப்பியர் முத

லிய பன்னிருவருக்குத் தமிழாசிரியர். வடமொழியிலும் சில நூல்கள் செய்தவர். சமுத்திரத்தை ஆசமித்தல் முதலிய பல அற்புதங்களைச் செய்தவர்.

ஒருநாள் அகத்தியமுனிவர் மகாமேருமலையினின்றும் பொதியமலைக்குச்சென்றார். செல்லும்வழியிலே திருக்குற்றாலம் என்னும் தலம் எதிர்ப்பட்டது. அத்தலத்தில் விஷ்ணுகோயில் ஒன்று உண்டு. அங்கே அளவிறந்த பிராமணர்கள் இருந்தார்கள். அவர்கள் பல உண்மைநூல்களைப் படித்தும், தமது வைணவசமயத்தையே மேற்கொண்டு ஒழுகுபவர்கள். சிவனடியார்களைக் கண்டால் கோபித்து இகழ்பவர்கள். மறையோர் என்னும் நாமத்தை மாத்திரம் தாங்கி, அதற்குரிய ஒழுக்கத்தை அனுட்டியாதவர்கள்.

இ. செல்வமனோகரன்

அகத்தியமுனிவர் திருக்குற்றாலத்தின் வீதியைக்கடந்து, விஷ்ணுகோயிலுக்கு முன்னே வந்தார். வருதலும், அவ்வாலயத்தில் இருக்கின்ற வைணவர்கள் அவரை நோக்கி, பகைவரைக் கண்டு பதைபதைப்பவர்போலக் கோபித்தார்கள். கோபங்கொண்ட வைணவர்கள், "தகாத உருத்திராக்ஷத்தையும் நீற்றையும் அணிந்திருக்கின்றாய். அதனால் உலகறியப் பிக்ஷைஏற்ற சிவனுக்கு நீ அடியவன். நீ இங்கே செல்லுதல் தகாது. கையிலே ஒரு கோலையுங் கொண்டிருக்கின்றாய். நீ எம்பெருமானுடைய திருக்கோயிலைக் கிட்டாது செல்லக்கடவாய்" என்று சொன்னார்கள். வைணவர்கள் இப்படிக் கூறுதலும், அகத்தியமுனிவர் அதனைக்கேட்டுக் கோபஞ்செய்யாது சிரித்து, "வேதஒழுக்கத்தை இகழ்கின்ற நீங்கள் இங்கே இருக்கின்றதை அறியேன். எனக்கு ஒருவருஞ் சொன்னாரில்லை. இது நல்லவழி என்று வந்தேன். உம்முடைய தன்மையை அறிந்தால் நான் இவ்வூருக்குச் செல்லநினையேன். கோபிக்கவேண்டாம். யான் மீண்டுசெல்லுவேன்" என்றார்.

அகத்தியமுனிவர் இதனைச் சொல்லுதலும், வைணவர்கள் பின்னும் பொறாது, "நீ இந்தஸ்தலத்தில்வருதலும் பாவம். மீண்டு செல்லுதி" என்றார்கள். செந்தமிழ்முனிவர் "நீங்கள் உண்மையையே சொன்னீர்கள். பழைய சாஸ்திரமுறையும் இதுவே" என்று சொல்லிச்சென்றார். செல்லும் முனிவர், "உயிர்க்குயிராகிய சிவபெருமானை இகழுகின்ற இந்த வைணவர்களுடைய

அகந்தையை வேரோடும் களைவேன்" என்று நினைத்து ஒரு விஷ்ணுபக்த வடிவங்கொண்டு, மீண்டும் அங்கேசென்றார். அவரை நெடுந்தூரத்திலே வரக்கண்ட வைணவர்கள் எதிரிலேசென்று போற்றி, பாதங்களிலே விழுந்து வணங்கினார்கள். அகத்தியமுனிவர் "இவ்வணக்கம் நாராயணனுக்குப் பிரீதியாகுக" என்று கூறினார். பின்னர் அவர்களைநோக்கி, "உங்களிடத்தில் விஷ்ணுவின்பால் உள்ள அன்புக்கு அளவில்லை என்கிறார்கள்; அதைக்காண நினைத்து வந்தோம். உலகத்தில் யாரும் உமக்கு நிகர் இல்லை. உம்மைக் கண்டமையினாலே நாமும் பேருணர்வு பெற்றோம். முத்தியைக்கொடுக்கின்ற அழகர்திருமலைபிடத்து இருந்தோம். இப்பொழுது அத்திகிரியில்இருப்பச் செல்கின்றோம். இங்கே எம்பெருமான் இருக்கின்ற கோயில்உள்ளது என்றார்கள். அது வணங்கும் விருப்புடையோம்" என்று கூறினார்.

அகத்தியமுனிவர் இப்படிச்சொல்ல, அவர்கள் கைவிரலைச் சுட்டிக்காட்டி, "அது விஷ்ணுகோயில்" என்றார்கள். முனிவர் கைதொழுது, கோயிலை அடைந்து, பிரதக்ஷிணஞ் செய்து வணங்கினார். வைணவர்களைப்பார்த்து, இவரை வழிபடுதற்கு மனம் விரும்புகின்றது. திருமஞ்சனம் முதலியவற்றைக் கொண்டு வாருங்களென்றார். வைணவருட் சிலர் இது நல்லது என்று சென்று, திருமஞ்சனம், புஷ்பம், சந்தனம், வஸ்திரம் முதலிய பூசைத்திரவியங்களைக் கொண்டுவந்து அகத்தியமுனிவருடைய முன்னே வைத்தார்கள். முனிவர், "நாம் இவரை அருச்சனை செய்யும் விதிமுறையைப் பாருங்கள்" என்று சிவபெருமானை மனசிலேதியானித்தார். தியானித்து விஷ்ணுவினுடைய திருமுடிமேல் தமதுகையைவைத்து, "குறுகு, குறுகு" என்று இருத்திக் குழைவித்து ஒரு சிவலிங்கவடிவாகச் செய்து தாபித்தார். பின்னர், தமது சுயரூபத்தைக்கொண்டு அருச்சித்தார்.

அதனைக் காணுதலும் அந்த வைணவப் பிராமணர்கள் கோபித்து, "இவன் வடிவினால் மிகக் குறியன். சிவபெருமானிடத்தில் மிகுந்த நேயமுள்ளவன். முன்னரே சைவ வேடத்தோடு இவ்விடத்தில் வந்தான். நாம் தூஷிக்க இவ்விடம் நில்லாது சென்று, பாகவதவடிவாய் இப்பொழுது வந்து நமது சமயத்தை அழித்தான். அந்தோ! இவன் மாயத்தையுடையவன். இவனைப்

பிடியுங்கள்'' என்று அகத்தியமுனிவரை வளைந்துகொண்டார்கள். பற்றுமாறு வளைகின்றவர்களை நெருப்பெழப் பார்த்துக் கோபித்தார். அவர்கள் முனிவரது கோபாக்கினிக்குப் பொறாதவர்களாய்த் தமது ஊரைவிட்டுப்பூமிமேல் எங்கும் ஓடினார்கள். அந்த ஸ்தலம் அன்றுமுதலாகச் சிவஸ்தலமாயிற்று.

அகத்தியமுனிவர் பரமசிவனை அருச்சித்துப் பணிந்துபொதிய மலையை அடைந்தார்.

---

## கூ. அந்தகாசுரன் சாரூபம்பெற்றது.

இரணியாக்கன் என்பவனுக்கு அந்தகாசுரன் என்னும் ஒரு புத்திரன் இருந்தான். அவன் பலகாலம்பரமசிவனைப்பூசித்து, தேவர்களாலும் தன்னுயிர் நீங்காதவரத்தையும், தவறுபடாத வல்லமையையும் பெற்றான். அவன் சிவபெருமானிடத்தில் பெற்றுக்கொண்ட வரத்தினால், ஒருவரையும் மதியாதவனாய், பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களோடு யுத்தஞ்செய்து வெற்றி கொண்டான். தேவர்கள் அவனைக்கிட்டி "உன்னையன்றி எங்களைக் காப்பவர் யார்? நீ பணித்த கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்வோம். எங்களை இரட்சித்தருளுக" என்று வேண்டினார்கள்.

அந்தகாசுரன் அவ்வார்த்தையைக்கேட்டுத் தனது தலையை அசைத்து, புன்முறுவல் செய்து "போரில் சிங்கேற்றை ஒத்தவன் நான் ஒருவனே. ஆதலால் நீங்கள் இன்றுமுதல் பெண்களைப் போலக் கண்களில் மைதீட்டி, சேலைதரித்து, ஆபரணம் அணிந்து; தலைமயிரைச் சீவிமுடித்துத் திரியக்கடவீர்கள். அவ்வாறன்றி யாவராயினும் ஆடவர் வடிவாய் என் கண்முன் காணப்பெறின், அன்றைக்கே உயிர் இழப்பீர்கள்'' என்று கட்டளையிட்டான். தேவர்கள் பெண்களைப்போலத் தங்களை அலங்கரித்துக்கொண்டு திரிந்தார்கள். அந்தகாசுரன் முன்னரிலும் பார்க்கப் பின்னரும் வருத்தினான்.

தேவர்கள் இத்துன்பத்தைச் சிவபெருமான் ஒருவரே நீக்க வல்லவர் என்று சிந்தித்து, மந்தரமலையிலிருந்து தவஞ்செய்தார்கள். சிவபெருமான் தோன்றியருளினார். தேவர்கள் சந்தோஷ

வெள்ளம் ஊற்றெடுக்க, "சுவாமீ! அந்தகாசுரன் எம்மை வருத்துகின்றான். எங்களைப் பாதுகாத்துப் புதுவாழ்வு தந்தருளுக" என்று துதிசெய்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி "நீங்கள் பெண்வடிவாய் உமாதேவியாருடைய சேடிகளோடு சேர்ந்து, அவனுக்கு மறையக்கடவீர்கள். பின்னரும் உங்களை எதிர்ப்பானாகில், ஓர் இமைப்பொழுதில் அவனைச் சங்கரிப்போம். அஞ்சாதீர்கள்" என்று சொல்லியருளினார். தேவர்கள் உமாதேவியாரின் சேடியர்களுக்குத் தொண்டுசெய்துகொண்டு இருந்தார்கள்.

அந்தகாசுரன் பெருந்தொகைச் சேனையோடு மந்தரமலையிற்போய்த் தேவர்களோடு எதிர்த்தான். தேவர்கள் மந்தரமலையை நீங்கித் திருக்கைலாசகிரியை அடைந்து சிவபெருமானுக்கு முறையிட்டார்கள். சிவபெருமான் "தேவர்களுடைய துன்பத்தையும், அந்தகனுடைய அகந்தையையும் நீக்கி வருவாயாக" என்று வைரவக்கடவுளுக்குக் கட்டளையிட்டருளினார். வைரவக்கடவுள் அந்தகாசுரனைச் சங்கரிக்கும்படி திருவுள்ளங்கொண்டு தமது கணங்களோடு சென்றருளினார். அந்தகன் வைரவக்கடவுளைக் கண்டவுடன் அக்கினிபோலக் கோபித்தான். இருபக்கச் சேனைகளும் தம்முட்கலந்து போர்செய்தன. அந்தகனுடைய சேனை முரிந்தது. அவன் கோபித்து எதிர்த்தான். தேவர்கள் பயந்தார்கள். அவர்களது கலக்கத்தை வைரவமூர்த்தி கண்டு அந்தகனோடு எதிர்த்தார். இருவரும் கடும்போர்செய்தார்கள். அப்பொழுது அசுரகுருவாகிய வெள்ளி மிருத்துஞ்சயம் என்னும் மந்திரத்தைச் செபித்தார். அம்மந்திரசத்தியால் அசுரசேனைகள் உயிர்பெற்று எழுந்து, மீண்டும் யுத்தம் செய்யத்தொடங்கின. அதனை அறிந்த வைரவக்கடவுள் வெள்ளியை விழுங்கினர். கணத்தலைவர்கள் அசுரசேனைகளை வெட்டி அழித்தார்கள். வைரவக்கடவுள் அந்தகனைத் தமது அருமைத் திருக்கரத்தில் ஏந்திய சூலத்தினாலே குத்தி எடுத்துக்கொண்டு, சிவபெருமானுடைய திருச்சந்நிதானத்துக்குச் சென்றார். அந்தகன் அகந்தைநீங்கிப் பரமசிவனைத் துதிசெய்தான். சிவபெருமான் அவனைச் சூலநுதியில் இருந்து இறக்கி, கிருபாநோக்கஞ்செய்து, தமது சாரூப பதவியையும் கணத்தலைமையையுங் கொடுத்தருளினார்.

வைரவக்கடவுள் தாம் விழுங்கிய வெள்ளியை வெளியே விடுத்தருளினர். வெள்ளிபகவான் வைரவமூர்த்தியைப் பூசித்துத் தமது மண்டலத்தை அடைந்தார். தேவர்கள் திருவருளைவியந்து தாம்கொண்ட பெண்கோலங்களையெல்லாம் அகற்றி, சந்தோஷத் துடன் தங்கள் தங்கள் பதவிகளைச் சேர்ந்தார்கள்.

---

## க௦. சிலந்தியும் சர்ப்பமும் யானையும்.

1

விசுவகன்மாவினது கண்ணிற்றோன்றிய மாதவவூறன் என்பவன் சிருட்டிகர்த்தாவாகிய பிரமதேவரை மதியாது தானும் உலகங்களைப் படைத்தான. பிரமதேவர் அவனை அழைத்து, மிகக்கோபித்து, "நீ சிறிய நூலை உண்டுபண்ணும் சிலந்தியா குக" என்று சபித்தனர். அவன் வணங்கி "அடியேன் தெரியாது செய்த குற்றத்தைப் பொறுத்தருளுக" என்று இரந்தான். பிரம தேவர் உள்ளங்கனிந்து "பிள்ளாய்! நீ அஞ்சாதே! சிலந்தியாகப் பிறந்து, தக்ஷிணகைலாசநாதரைப் பூசித்து, நற்கதி அடைவா யாக" என்று அனுக்கிரகித்தார். அவன் அக்கணமே சிலந்தியா யினன்.

அந்தச் சிலந்தியானது கிருதயுகத்திலே, தென்கயிலாசநாத ரை வழிபட நினைத்துப் பொன்முகரியாற்றில் ஸ்நானம்பண்ணி, ஒரு திருக்கோயிலைத் தன்வாயினின்றும் வெளிப்படும் நூலினாலே உண்டாக்கியது. அது அற்பநேரமும் இளைப்பாறுதல் இன்றி, அழிந்த ஒழிந்த இடங்களையும் நூலினாலே திருத்திவந்தது. சிவ பெருமான் அதனுடைய அன்பைச் சோதிக்கத் திருவுள்ளங்கொ ண்டு, தமது சந்நிதியில் இருந்தவிளக்கைச் சுவாலித்து எரியும்படி செய்தார். அப்பொழுது நூலினாற்கட்டப்பட்ட திருக்கோயிலா னது எரிந்து சாம்பராயது. சிலந்தி "இக்கோயில் தீப்பற்றி எரிந் தது யான் முன்செய்த தீவினையா? எனது உயிர்த்துணைவராகிய சிவபெருமானுக்கு இப்புல்லிய ஆலயத்தில் திருவுள்ளமில்லையா? இவ்வாறழிதற்கோ அநேகநாளாக வருந்தி, அர்த்தசாமத்திலும் நித்திரையின்றி ஆலயத்தை உண்டாக்கினேன். இப்பெருமான் எளியேனிடத்தில் வைத்த திருவருளும் இவ்வளவுதானா?" என்று புலம்பித் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியது. சோகத்தில் மூழ்கிய

சிலந்தி, தீபத்தில் விழுந்திறப்பதற்குநினைத்து மேலே எழுந்தது. சிவபெருமான் உடனே தோன்றியருளி, அது விளக்கில்விழுந்து இறவாதபிரகாரம் தடுத்து "நீ உன்னுடைய மனவேட்கையைச் சொல்லக்கடவை. அதனைத் தருவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அத்திருவாக்கைக்கேட்ட சிலந்தி "தேவரீருடைய திருவடியின்கீழ் அடியேனைச் சேர்த்தருளுக" என்று விண்ணப்பித்தது. சிவபெருமான் அவ்வண்ணமே அச்சிலந்தியைச் சேர்த்தருளினர்.

2

திருக்கைலாசமலையிலே, சிவபெருமான் தனது திருமேனியிலே, புலித்தோலாடை முதலியவற்றைத் தரித்து, சேடன் முதலிய சர்ப்பங்களை ஆபரணமாகஅணிந்தருளினர். அப்பொழுது காளன் என்னும் பாம்பானது சிவபெருமானை நீங்கி, பெண்ணுசை கொண்டு வேறிடத்திற் சென்றிருந்தது. திருக்கைலாசபதி அதனை அழைத்து "காளனே! நீ எம்மை நீக்கி, பெண்ணுசைகொண்டு இருந்தமையினல் தென்கைலாசத்தை அடைந்து எம்மைப் பூசிக்குதி; பூசிக்கும் காலத்திலே, ஒரு யானையும் எம்மை அருச்சிக்க, அதற்கும் உனக்கும் பகையுண்டாய் இருவரும் இறந்து முத்தியடைவீர்கள்" என்று கூறியருளினர். சர்ப்பம் தென்கைலையை அடைந்து, எம்பெருமானை இரத்தினங்களினல், திரேதாயுகத்தின் இறுதியிலே பூசித்துக்கொண்டிருந்தது.

3

இருக்கும் நாளிலே, திருக்கைலாசமலையில் அத்தி என்னும் கணத்தலைவன், வாயிற்காவலர்களது உத்தரவின்றி, திருக்கோயிலினுள்ளே சென்ருன். உமாதேவியார் கணநாதனை நோக்கி, "நீ செய்த குற்றத்திற்காக இவ்விடத்தை அகன்று, யானையாய்த் தென்கைலாசத்திற்போய் எம்பெருமானைப் பூசிக்குதி. அங்கே உனக்கும் அப்பெருமானை அருச்சிக்கவரும் ஒரு பாம்புக்கும் பகை உண்டாகும். உண்டாக இருவரும் இறந்து முத்தியடைவீர்கள்" என்று ஆஞ்ஞாபித்தருளினர்.

அத்தி என்பான் அவ்வாறே யானையாய்ச் சிவபெருமானைப் பூசிக்கும் பொருட்டுத் துவாபரயுகத்தொடக்கத்தில் தென்கைலாசம் வந்து சேர்ந்தான். அந்த யானையானது அன்புடனே பொன்முகரியாற்றில் முழுகி, தனது கையினலே நீரை முகந்து

R. Navaqnip i Daci



கொண்டு, சிவலிங்கப் பெருமானது முன்னிலையை அடைந்தது. பாம்பு அலங்கரித்துப் பூசைசெய்த இரத்தினங்களைச் சிதறிவிட்டு, தான்கொண்டுவந்த நீரினால் அபிஷேகம் செய்து, வில்வ பத்திரங்களைத் திருமுடியிலே சாத்திச் சென்றது. மறுநாள் சூரியோதயத்தில் பாம்பு வந்து, அத்தளிர்களைக்கண்டு, "யான் பூசித்த இரத்தினங்களைச் சிதறி, திருமுடிமேல் இலைக் குவியலைச் சுமத்தினர் யாவரோ?" என்று இரங்கி, வில்வ பத்திரங்களைச் சிதறி, இரத்தினங்களாற் பூசைசெய்து சென்றது.

பின்பு யானை வந்து அம்மணிகளைக் கண்டு, "ஐயோ! யான் பரமபதிக்குத் தரித்த பசிய மெல்லிய தளிர்களையும், மலர்களையும் அகற்றி, வீணாகப் பல கற்களை ஏற்றிவைத்த கொடியர் யாவரோ உணரேன்" என்று இரத்தினங்களை அகற்றி, வில்வ பத்திரங்களால் பூசித்து அகன்றது.

மற்றைநாளிலே பாம்புவந்து, சிவலிங்கத்தினது முடியிலே பத்திர புஷ்பங்களைக் கண்டவுடன் அயர்ந்து, "இக்கொடுஞ் செய்கை புரிந்தோர் எனது பகைவரே! இது பரமசிவனுக்கும் உடன்பாடோ? நாளைக்கு எல்லாவற்றையுங் காண்பேன்" என்று பூசைசெய்து அகன்றது. அகன்றபின்னர் யானைவந்து, பூமியிலே தனது கையைமோதிக்கொண்டு, வீழ்ந்து புலம்பி, "எனது பிதாவே! உமக்கு இது திருவுள்ளச்சம்மதமோ? இக்கற்களைத் தாமரை வில்வம் முதலியனவாகத் தரித்தீரோ? நீரும் பகைவர் பக்கமாக இருந்தால் எனக்குத் துணையாயுள்ளார் யாவர்?" என்று புலம்பி, நான் எந்தப்பிரகாரமாகவாவது என்பகைவரைக் கொல்வேன்; அல்லது சாவேன்" என்று நிச்சயித்துக்கொண்டு சிவார்ச்சனை செய்துசென்றது. அன்று இரவுமுழுதும் நித்திரை செய்யாது விடியற்காலம் வருதலைநோக்கி இருந்தது.

சர்ப்பமானது சூரியன் உதயஞ்செய்வதற்கு முன்னே சிவ பெருமானது திருச்சன்னிதியை அடைந்து, அக்கடவுளுடைய திருமுடியிற் சாத்திய பத்திரபுஷ்பங்களுள்ளே மறைந்து, உடலைச் சுருக்கிக்கொண்டு இருந்தது. யானையும் விரைவில் வந்து தான்சூட்டியபடியே பத்திரபுஷ்பங்கள் இருத்தலைக் கண்டு சந்தோஷித்து, அவைகளைத் தனதுகையினாலே தள்ளியது. அவற்

றுள் மறைந்திருந்த சர்ப்பம் சீறி, துதிக்கையில் உள்ள துவாரத்தின்வழியாக மத்தகத்திற் புகுந்து குடைந்தது. யானை அதனைச் சகிக்கமாட்டாது முழங்கி, பூமியிலே புழைக்கையை மோதியது. மத்தகத்தை உரோஞ்சியது; குடைவு தீரவில்லை. என்னுடைய பகையையுங் கொன்று நானும் இறப்பேன் என்று சிந்தித்து, நீண்ட துதிக்கையை முடக்கி, பூமி அதிரும்படி அம்மலைமேல் தாக்கி, தலைபிளவுபட்டு விழுந்து இறந்தது. பாம்பும் சரீரம் நெரிந்து இறந்தது. சிவபெருமான் பார்வதிதேவியுடன் இடப வாகனத்திற்றோன்றி, பாம்பு யானை ஆகிய இரண்டினுக்கும் தமது சாரூப பதவியைக் கொடுத்தருளினார்.

சிலந்தி பாம்பு யானை ஆகிய மூன்றும் பூசித்துப் பரகதி பெற்றகாரணத்தால் தென்கைலாயத்திற்குச் * சீகாளத்தி என்னும் பெயர் உண்டாயிற்று.

---

## கக. சிவபெருமான் தாயானது.

**கா**விரிப்பூம்பட்டினத்திலே, அரதனபாலன் என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவன் தன்மனைவியோடு கூடி வாழுநாளிலே, புத்திரப்பேற்றை விரும்பிச் சிவார்ச்சனை செய்தான். அப்பூசாபலத்தினாலே, உத்தம குணங்கள் எல்லாம் நிறைந்த ஒரு பெண்குழந்தையைப் பெற்றான். அக்குழந்தைக்கு அரதனவதி என்று சுற்றத்தார்கள் நாமதேயம் வைத்தார்கள், அவள் குதலை வார்த்தை தெளிந்து வளர்ந்திருந்தாள். திரிசிராமலையில் வசித்த தனகுத்தன் என்னும் ஒரு வணிகன் அவளை விவாகஞ் செய்து, இல்லறத்தை நடாத்தி வாழ்ந்திருந்தான்.

வாழ்ந்திருக்குநாளிலே, மருமகன் மனைவியோடு தனது நகரத்துக்குச் செல்லுதல்வேண்டும் என்று மாமனாகிய அரதனபாலனுக்கு அறிவித்தான். மாதுலன் இரத்தினம்முதலிய பொருள்களைக் கொடுத்துச் "செல்வீர்களாக" என்று அனுமதிகொடுத்து அனுப்பினான். தனகுத்தனும் மனைவியும் திரிசிராவை அடைந்து ஒரேமனமுடையவர்களாய், சிவபுண்ணியங்களைச் செய்திருந்

---

* சீ-சிலந்தி, காளம்-பாம்பு, அத்தி-யானை.

தார்கள். அரதனவதி நாயகனுடைய கட்டளைப்படி திரிசிராமலை யில் எழுந்தருளியிருக்கும் செவ்வந்தீசுரரையும், மட்டுவார் குழ லம்மையையும் வணங்கி, வெள்ளிக்கிழமைவிரதத்தை அனுட்டி த்து வருவாளாயினள். இவர் இருவரும் இப்படியிருக்குநாளிலே, புகார் நகரத்தில் இருந்த அரதனபாலன் தேகவியோகமாயினன். சுற்றத்தார்கள் தனகுத்தனுக்கும் அவன் மனைவிக்கும் அறிவித் தார்கள். அவர்கள் அறிந்து துன்பக்கடலில் அமிழ்ந்தி, புகார் நகரடைந்தார்கள். தனகுத்தன் மாமனுடைய ஈமக்கடன்களை யும் மற்றைய கிரியைகளையும் செய்துமுடித்தான். பின்பு மனை வியுடன் திரிசிராமலையை அடைந்து, சிவவிரதங்களை அனுட்டித் தல், விருந்தினரை உபசரித்தல் முதலிய பலதருமங்களைச் செய்தி ருந்தான். இருக்குநாளிலே, மனைவிவயிற்றில் ஒரு கருப்பம் உண் டாயிற்று. ஒன்பது மாதங்கள் நிறைந்தன. காவிரிப்பூம்பட்டின த்திலிருந்த தாயும் மகளுடைய செயலை அறியவேண்டும் என்று நினைத்தாள். மழை அதிகமாகப் பெய்து, பொன்னிநதி இருகரை புரண்டு பாய்ந்து சென்றது. ஆறுபாயுந் தடையினாலே, தாய் மகளிடம் செல்லும் நினைவை மாற்றினாள். அரதனவதி அதனை அறிந்திலாளாய் "எனது அன்னை பிரசவத்துக்குரிய பொருள் களைக்கொண்டு இன்றுவருவாள், நாளைவருவாள், வழிநடந்திளை த்தகால்களைப்பிடிப்பேன்; முகத்திலிருந்து சொரியும் வெயர்வை யை மாற்றுவேன்" என்று பலவாறாக நினைத்தாள்.

அருந்ததிபோன்ற கற்பையுடைய அரதனவதி இப்படி நினை க்குஞ்சமையத்தில், திரிசிராமலையில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான் அவளுடைய தாயைப்போல முதுகில் நரைத்தகூந்தல் பொருந்தவும், மூங்கிற்றண்டம் திருக்கரத்தில் விளங்கவும், திரு முகம் அசையவும், நெற்றியில் வெயர்வை துளிக்கவும், இளைப்புத் தோன்றவும், நெடுமூச்செறியவும் நின்று நின்று சென்றருளினர். காயமிடுதற்குரிய பல பண்டங்களையும், எண்ணெய்க்கலசத்தை யும், பிறபொருள்களையும் இருபெண்கள் சுமைகளாய் எடுத்து அவருக்குப் பின்னே சென்றார்கள். தூரத்தில் வருவதைக்கண்ட அரதனவதி அவரைத் தனது மாதாவென்று துணிந்தாள். சமீபித் தவுடன், எதிர்சென்று, இரண்டுபாதங்களிலும் விழுந்து வணங் கினள். மாதாவாக வந்த சிவபெருமான் அவளை இருகரங்களா லுந் தழுவி, அருண்மொழிகளைக்கூறி ஆசனத்தில் இருந்தார்.

அரதனவதி காயப்பண்டம் முதலியவற்றைக் கொண்டு வந்த பெண்களுக்கு அன்னம் முதலிய உணவுகளைக் கொடுத்தாள்.

மற்றைநாள் அரதனவதி வயிறுநொந்து வருந்தினாள். தாயாகிய சிவபெருமான் அவளை எடுத்தணைத்து, சரீரத்தில் தைலமும் பூசி, முதிர்ந்த அன்பினால் மருத்துவத்தொழில்கள் எல்லாவற்றையும் செய்தார். அப்பெண் ஒரு ஆண்குழந்தையைப் பெற்றாள். பிரசவித்த அம்மகளுக்குக் காயம் முதலிய அரியமருந்துகளைக் கொடுத்துச் செய்யவேண்டிய பரிகாரங்களையெல்லாம் செய்தார். அக்குழந்தையைத் தொட்டிலிற் கண்வளரும்படிசெய்த, ஒரு மாதம்வரையும் வளர்த்தார்.

ஆற்றுப் பெருக்குவற்றியது. முன்னர் ஆற்றுப்பெருக்கினால் தடைப்பட்டிருந்த தாய் அரதனவதியின்செயலை அறியும்படிவந்தாள். தனது மாமி இல்லத்தில் வருவதைத் தனகுத்தனும் கண்டான். இவ்விருவரில் அன்னியர் யாவரோ என்றுநினைத்தான். முன்னர்வந்த தாயாகிய சிவபெருமான் பிரசவஅறையுள் இருந்தார். பின்னர்வந்த தாய் பிரசவஅறையுட் புகுந்து, அவருக்கு எதிர்முகமாக இருந்தாள். அரதனவதி அதிசயங்கொண்டு, எனது தாய் இவர்களுள் யார் என்று மயங்கிச் சமீபித்தாள். முன்னர்த் தாயாகவந்த சிவபெருமான் மின்னலைப்போல மறைந்தருளினார்.

மறைந்த கடவுள், இடபவாகனத்தின்மீது உமாதேவிசமேதராய்த் தோன்றியருளினார். தேவர்களும் முனிவர்களும் வேதபுருடர்களுந் துதித்தார்கள். சிவபெருமான் ஆதிசைவர் முதலியோர் காணும்படி திருக்கோயிலினுள்ளே மறைந்தருளினார். அடியார்க்கெளியராய் வந்தருளும் சிவபெருமானை உலகத்தார் அனைவரும் தாயினும் நல்லவர்; நல்லவர் என்றுசொல்லி வணங்கினார்கள். தனகுத்தனும் மனைவியும், சுற்றத்தார்களும் தாயுமானேசுரரை அனுதினமும் பணிந்து, சிவலோகத்தை அடைந்தார்கள்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே.

## ௧௨. பொய்.

பாண்டுமகாராசனுடைய மைந்தர்களாகிய தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்னும் ஐவருக்கும், திருதராட்டிரனுடைய புத்திரர்களாகிய துரியோதனன் முதலியநூற்றுவர்களுக்கும் பூமிகாரணமாகப் பெரும்பகை உண்டாயிற்று. இருபக்கத்தாரும் குருபூமியை அடைந்து, பெரும்போர் செய்தார்கள். வீட்டுமர் துரியோதனன்பக்கத்துச் சேனுபதியாய்ப் பத்துநாள்வரையும் யுத்தஞ்செய்து தளர்ந்துவிழுந்தார். பின்னர்த் துரோணுசாரியர் சேனுபதியாய், தருமன்பக்கத்துச் சேனுபதியாகிய திட்டத்துய்மனேடு எதிர்த்து அம்புமழையைச் சொரிந்தார். பாண்டவசேனைகள் புறங்கொடுத்தன. அருச்சுனன் அதுகண்டு துரோணுசாரியரோடு எதிர்த்துப் போர்செய்தான். இவர்கள் செய்தபோரைத் தேவர்களும் வியந்து நோக்கினுர்கள். துரோணுசாரியர் அருச்சுனனேடு போர்செய்து ஆற்றுது அவனைவிடுத்துத் திட்டத்துய்மனேடு போர்செய்து அனேக அரசர்களையுங் கொன்றுர். திட்டத்துய்மனும் சினங்கொண்டு, துரோணுசாரியர்மீது பாணங்களைச் சொரிந்து மிகவருத்தினுன். துரோணுசாரியர் அவனை வாளினுல் அடித்துப் பின்னிடச்செய்தார். இருபக்கத்திலும் பலசேனைகள் இறந்தன.

இவற்றைக்கண்ட கிருஷ்ணர், "துரோணுசாரியரை வெல்லவிரும்பினுல் அவருடையபுத்திரனுகிய அசுவத்தாமா இறந்தானென்று சொல்லவேண்டும். அவர் அதனைக் கேட்டுப் புத்திரசோகத்தினுலே இறந்துவிடுவார்" என்றுசொன்னுர். "அப்படிப் பொய்சொல்லி அரசைக் கொள்வதிலும் அதனை இழப்பது நல்லது" என்று தருமன் கூறினுன். அதனைக்கேட்ட வீமன், விரைந்து அசுவத்தாமா என்னும் யானையைக் கொன்றுவிட்டு, துரோணுசாரியரை நோக்கி, "பிராமணேத்தமர்கள் பிறருக்கு இடர் செய்வாரோ? சத்துருக்கள் என்றும் பிறர் என்றும் எண்ணுவார்களோ? அறிவிலிகளாகிய திருதராட்டிரனுடைய புத்திரர்களுக்காகவா போராடுகின்றீர்? அசுவத்தாமா இறக்கவும் கலக்கமின்றி நிற்கின்றீர். உமதுமேன்மை வியக்கத்தக்கது" என்று கூறினுன். துரோணுசாரியர் வீமனதுசொல்லை நம்பாது ஒரு தூதனையழைத்து, "மூன்றுஉலகங்களையும் ஒருங்கே பெற்

னும் சிறிதும் பொய்சொல்லாத தருமனிடத்திற் சென்று இதனை அறிந்துவருவாயாக" என்று அனுப்பினார்.

இங்கே கிருஷ்ணர் தருமரைப்பார்த்து "அசுவத்தாமா இறந்தான் என்று ஒருமுறை நீ பொய்சொல்லில், துரோணர் ஆயுதங்களை எறிந்து வீழ்ந்திறப்பர்" என்று சொன்னார். தருமன் உடனே "இதனை என்செவியில் விழுத்துதலும் பாவம்" என்று தன் இரண்டுகைகளாலும் செவிகளைப்பொத்திக்கொண்டு, "செல்வமும் சிறப்பும் அன்பும் கீர்த்தியும் பிறவும் பொய்சொல் லுதலினாலே பொன்றிவிடும்; ஆதலால் இப்பூமியைப் பெற்றுக் கொள்ளேனாயினும் பொய் சொல்லேன்" என்றான். கிருஷ்ணர் தருமனைநோக்கி, "நூல்களிலே கூறப்பட்ட எல்லாத் தருமங்களும் உன்னிடத்திலே குடிகொண்டிருத்தலினால், இந்த அற்ப பொய் பேசுதலினாலே சிறியனாகமாட்டாய்; இப்பொய்யினால் வரும் பாவத்தை மற்றைய தருமங்கள் எல்லாம் தகித்துவிடும். பயப்படாது கூறுக" என்றார். தருமன், நீதி பொறுமை ஒழுக்கம் முதலிய சற்குணங்கள் எல்லாம் பொருந்தி விளங்குபவனாயிருந்தும் தனது மனவுறுதி தளர்ந்தான். அப்பொழுது துரோணாசாரியர் விடுத்த தூதன்வந்து வினவினான். தருமன் ஆசாரியர் நின்ற திசையைநோக்கி, "அசுவத்தாமா இறந்ததுமெய்யே. யானை" என்றான். அசுவத்தாமா இறந்ததுமெய்யே என்பதை உரத்தகுரலாலும், யானை என்பதைத் தாழ்ந்தகுரலாலும் கூறினான். தருமன் கூறியது சொல்லளவில் மெய்யேயாயினும், பயனளவில் வெளிப்படச் சொல்லும் பொய்யினும் கொடியதாயது. துரோணாசாரியர் தருமன்கூறியதைக் கேட்டலும், புத்திர சோகத்தால் ஆயுதங்களைஎறிந்து அவசமாயினார். அதனைக்கண்டபொழுது தருமன் அறிவழிந்து, "ஆசிரியரே! அசுவத்தாமா என்னும் மதயானை பட்டதன்றி, உமதுமகன் இறக்கவில்லை" என்று உண்மையை வெளிப்படுத்தினான். துரோணர், எறிந்த ஆயுதங்களை எடாது யோகசமாதியினால் தமது உயிரைவிட்டுச் சுவர்க்கலோகமடைந்தார். திட்டத்துய்மன் துரோணருடைய சிரசைக்கொய்தான். துரோணரும் இறக்கச் சூரியனும் அஸ்தமித்தான். அரசர்கள் அனைவரும் தங்கள் பாடிவீட்டை

S. Sarogini Devi



அடைந்தார்கள். இவ்வாறே பதினெட்டு நாள்வரையும் யுத்தம் நடந்தது: துரியோதனனும் இறந்தான். பாண்டவர் வெற்றி பெற்றார்கள்.

தருமன் அதன்பின்னர் இறந்த அனைவருக்கும் உத்தரக்கிரியைகள் செய்து, அத்தினாபுரியையடைந்தான். தௌமியமுனிவர் உரியமுகூர்த்தத்திலே, முனிவரும் மன்னரும் மற்றுமுள்ளோரும் கொண்டாடத் தருமனுக்குமுடிசூட்டினார். தருமன் உலகங் களிகூர மறங்களைக் கடிந்து, அறங்களை வளர்த்து வருவானாயினான்.

இப்படிச் செங்கோல்செலுத்திய தருமன் முடிவில் தனது சரீரத்தோடுகூடச் சுவர்க்கம் சென்றான். செல்லும் பொழுது யமலோகத்துக்குப்போனான். யமன் அவனுக்கு மரியாதை செய்தான். தருமன் யமனது சபையில் இருந்தான். அப்பொழுது சித்திரகுத்தர் யமனைவணங்கி, "சுவாமீ இத்தருமர் தமது புண்ணியச்செய்கைகளால் சுவர்க்கத்துக்குச் செல்லுகின்றார். பாரதயுத்தத்தில் இவராலே ஒரு பொய் சொல்லப்பட்டது. ஆகையால் இவர் அப்பாவத்தைத்தீர்க்கும்பொருட்டு, நரகங்களையும் அங்கே ஆன்மாக்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் கண்களாற்காண வேண்டும்" என்று சொன்னார்.

தருமன் அதுகேட்டு யமனோடும்போய், எல்லாநரகங்களையும் சிவத்துரோகிகளும் பிறரும் அங்கே அனுபவிக்கும் யாதனைகளையும் பார்த்து வருந்தினான். தருமன் அதன் பின்பு யமனிடம் விடைபெற்றுக்கொண்டு, விமானத்தில் ஏறிச் சுவர்க்கம் போய்ச் சேர்ந்தான்.

புண்ணியபுருஷனாகிய தருமனும் பாரதயுத்தத்தில் ஒருபொய் சொன்னகாரணத்தினால் கொடிய நரகங்களையெல்லாம் தனது கண்களாற்கண்டு வருத்தமடைந்தான். ஆதலால் நாம் ஒருசிறிதும் பொய் சொல்லுதல் கூடாது.

---

## ௧௩. ஆலயதரிசனம்.

அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமான் ஒருவரையே பரமபதி என்று துணிந்து, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிற் கூறியபிரகாரம், தங்கள் நிலைக்கு ஏற்றவாறு அவரை வழிபடுபவர்களே சைவர் எனப்படுவர்.

சிவபெருமானை அன்பர்கள் வழிபடுந்தானங்கள் மூன்றும். அவை ஆலயத்துள்ள இலிங்கம், சிவனடியார் திருவேடம், ஆன்மா என்பனவாம்.

இந்த வழிபாட்டுக்கு அங்கங்கள், சிவத்திரவியம் விரும்பாமை, கொலைசெய்யாமை, புலாலுண்ணாமை, களவுசெய்யாமை, பிறர்மனை விரும்பாமை, இரக்கம், வாய்மை முதலியனவாம்.

சைவசமயிகள் விபூதியும் உரித்திராக்ஷமும் தரித்துக்கொண்டே சிவபுண்ணியங்கள் செய்தல் வேண்டும். விபூதிஉருத்திராக்ஷம் தரியாது செய்யும் வழிபாட்டினாற் பயன் இல்லை.

திருக்கோயிலுள் இருக்கும் சிவலிங்கம் பரார்த்தலிங்கம் எனப் பெயர்பெறும். அது சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம் என ஐந்துவகைப்படும். அவற்றுள் சுயம்புலிங்கம் தானே தோன்றியது. காணலிங்கம் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கம் விஷ்ணுமுதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளாற்றாபிக்கப்பட்டது. அசுரர் இராக்கதர்களாலே தாபிக்கப்பட்டதும் அஃது. மானுடலிங்கம் மனிதராலே தாபிக்கப்பட்டது.

சதாசிவமூர்த்தியுடைய ஐந்து முகங்களினின்றுந் தோன்றிய காசிபர்முதலிய ஐந்து முனிவர்களுடைய கோத்திரத்திற் பிறந்தவர்களாய் சமயதீக்ஷை, விசேடதீக்ஷை நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிடேகம் ஆகிய நான்கும் பெற்றவர்களாய், கருமங்களைச் சிரத்தையோடு விதிப்படி செய்யவல்லவர்களாய் உள்ள சிவாசாரியர்களே பரார்த்தலிங்கபூசைக்கு அதிகாரிகள்.

அருச்சகர்கள் கிழக்கும் தெற்கும் சந்நிதியிருந்தால் வலப் பக்கத்தும், மேற்கும் வடக்கும் சந்நிதியாயின் இடப்பக்கத்தும் நின்று பூசைசெய்யவேண்டும்.

அகமும் புறமும் தூயராய், தீக்ஷைபெற்றவராய், ஆகம புராணங்களைக் கற்றுணர்ந்தோராய், சிவபக்திவாய்ந்தவர்களாய் உள்ள சைவர்களே சிவாலயத்தை நடத்துதற்கு அதிகாரிகள். இம்மைப்பயனாகிய பொருள்முதலியவற்றைக் குறியாது, திருக் கோயிலை விதிப்படி நடத்துவோர் இம்மையிற் புகழ்பெற்றுப் பின்பு சிவபதமடைவர். சிவத்திரவியங்களைத் திருடுவோரும், முந் தின படித்தரங்களைக் குறைத்தோரும், இம்மையிற் பழிசேர்ந்து, பின்பு நரகில்விழ்ந்து இடருழப்பார்கள்.

திருக்கோயிலிலே பூசை முதலியவைகள் விதிப்படி நடத்தல் வேண்டும். தவறுமாயின், உலகத்துக்குத் தீமைவிளையும்.

சைவர்கள் தினந்தோறும், ஆசாரத்தோடு, வஸ்திரம் இர ண்டு தரித்துக்கொண்டு, அநுட்டானம் முடித்துத் திருக்கோயி லுக்குப் போகக்கடவர். ஸ்நானம் முதலிய நியமங்கள் இல்லாது திருக்கோயிலுக்குச் செல்லுதல்கூடாது.

கோயிலுக்குப் போம்பொழுது வெறுங்கையுடனே போகா து, தேங்காய்முதலிய யாதேனுங்கொண்டு செல்க. பொருள்க ளில்லாதவர் பத்திரபுஷ்பங்கொடுத்து வணங்குக. அதுவுங் கூடா தவர் சந்நிதியில்உள்ள குப்பை முதலியவற்றைப்போக்கி, வணங் கக்கடவர்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோ புரத்தை வணங்கி, கைகுவித்து உள்ளாகப்புகுந்து, பலிபீடத் துக்கு இப்பால் வணங்கக்கடவர். மைந்தர்கள் அட்டாங்கநமஸ் காரமும் பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரமும் செய்தல்வேண்டும்.

அட்டாங்கநமஸ்காரமாவது தலை, செவியிரண்டு, கையிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். பஞ்சாங்கநமஸ்காரமாவது தலை, கைகள்இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்துஉறுப்பும் நிலத்திலே பொருந்த வணங்குதலாம். திரயாங்கநமஸ்காரம் ஆட

வர் பெண்கள் ஆகிய இருவருக்கும் பொது. திரியாங்கநமஸ்காரமாவது சிரசிலே இரண்டுகைகளையும் குவித்தலாம்.

நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும் செய்க. ஒருதரம் இருதரம் பணிந்து எழுதல் குற்றம்.

கிழக்குநோக்கிய சந்நிதியில் பலிபீடத்துக்கு இப்பால் அக்கினிமூலையில் சிரசைவைத்து, மார்பு நிலத்திலுற வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரேநீட்டி, பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் பூமியிலே பொருந்த, கைகளை அரையைநோக்க நீட்டி, வலக்கன்னத்தையும் இடக்கன்னத்தையும் தலையைத் தீண்டச்செறித்து, நமஸ்காரம்பண்ணக்கடவர். தெற்குநோக்கிய சந்நிதியிலும் மேற்குநோக்கிய சந்நிதியிலும் நிருதிமூலையில் சிரசைவைத்து, முன்போலப் பணியக்கடவர். வடதிசையைநோக்கும் சந்நிதியில் பலிபீடத்துக்கு வாயுமூலையில் சிரசுவைத்து முன்போல நமஸ்கரிக்கக்கடவர்.

இவ்வகையாக வணக்கஞ்செய்து, எழுந்து கைகுவித்துக்கொண்டு, சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, கால்களை மென்மெலவைத்துப் பிரதக்ஷிணம் செய்க.

கொடிமரநிழலையும் தூபிநிழலையும் கடத்தல் கூடாது. பிரதக்ஷிணம் பண்ணும்பொழுது அந்தநிழலின் மூன்றுகூறுநீக்கி, மற்றிரண்டு கூற்றிற் செல்லக்கடவர். திருவிழாவில் பெருமானுடன்செல்லிற் பாவமில்லை. அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்தில் பிரதக்ஷிணம் நமஸ்காரம் செய்தல் ஆகாது.

பிரதக்ஷிணம் செய்தபின்பு சந்நிதானத்தில் நமஸ்கரித்து, துவாரபாலகரையும் திருநந்திதேவரையும் வணங்கி, அனுமதி பெற்று உள்ளே போகக்கடவர். போய், விநாயகருடைய சந்நிதானத்தில் நமஸ்காரம்பண்ணி, முட்டியாகப்பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மும்முறைகுட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு, மும்முறை தாழ்ந்தெழுந்து, நமஸ்காரம்பண்ணுக.

பின்னர் தலையிலேனும் இருதயத்திலேனும் கைகளைக் கூப்பிக்கொண்டு, சிவலிங்கப்பெருமானுடைய திருமுன்சென்றுதியா

னஞ்செய்து, பத்தியோடு தோத்திரஞ்செய்யக்கடவர். அங்கே அருச்சகரைக்கொண்டு, அருச்சனைசெய்வித்து, இயன்ற தக்ஷிணை கொடுக்கக்கடவர்.

பின்பு நடேசர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர்முதலிய மூர்த்திகளையும் சமயாசாரியரையும் வணங்கக்கடவர். அதன்பின் தேவியினுடைய திருச்சந்நிதானத்தையடைந்து வணங்கக்கடவர். இறுதியில் விபூதிபெற்றுத் தரித்துக்கொண்டு, சண்டேசுரர் சந்நிதியையடைந்து, மும்முறை கைகொட்டி, தரிசன பலத்தைத் தரும்படி பிரார்த்திக்க.

அதன்பின் மீண்டும் திருநந்திதேவரை வணங்கிப் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை விழுந்துவணங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை இயன்றளவு செபித்து வீட்டுக்குச் செல்லக்கடவர்.

காலையில் தரிசித்தவர்களுக்கு இரவிற்செய்த பாவம்போம். உச்சிக்காலத்தில் தரிசித்தவர்களுக்குப் பிறந்தநாள் தொடங்கிச் செய்த பாவம் போம். சாயங்காலத்தில் தரிசித்தவர்களுக்கு எழுபிறப்பினும் செய்த பாவம் போம். ஆதலால் சைவசமயிகள் யாவரும் தவறாது ஆலய தரிசனம் செய்யக்கடவர்.

சோமவாரம் அட்டமி முதலிய புண்ணியகாலங்களில் ஆலய தரிசனம்செய்தல் மேலாகிய சிவபுண்ணியமாம். ஈசுரனைச்சிந்தித்துக்கொண்டு அங்கப்பிரதக்ஷிணம் செய்வோர் முத்தியடைவர்.

---

## ௧௪. மதுரை.

கடம்பவனத்துக்குக் கீழ்த்திசையிலே, குலசேகரபாண்டியனுக்கு இராசதானியாயுள்ளது மணவூர். அந்நகரத்திலே, சிவார்ச்சனை முதலிய சிவதருமங்களைச் செய்யும் தனஞ்சயன் என்னும் செட்டி ஒருவன் இருந்தான். அவன் மணவூரில் இருந்து மேற்குத்திக்கில் உள்ள ஊர்களுக்குப்போய், வாணிகஞ் செய்து தனது ஊருக்குமீண்டான். மீண்டு கடம்பவனத்தைச் சேரச் சூரியன் அஸ்தமயனமாயினன். அங்கே தமியனாய்மெலியும் வணிகன், மிக்கஒளிபொருந்திய ஒரு விமானத்தை நேரே

கண்டான். அதற்குச் சமீபமாகப்போய், அங்கே எழுந்தருளி யிருக்கும் சோமசுந்தரக்கடவுளை வணங்கிக்கொண்டு, ஆனந்தத்துடன் இருந்தான்.

அன்று சோமவாரம் ஆகையால், தேவர்கள் அங்கே வந்து பூசைசெய்தார்கள். அதனைத் தனஞ்சயன் ஞானநோக்கத்திலே கண்டு, பூசைக்குரிய கஸ்தூரி, பன்னீர் முதலிய திரவியங்களைத் தேவர்கையிலே கொடுத்தான். தான் திருக்கோயிலின் புறத்திலிருந்து, தன்னுடைய இட்டலிங்கத்தைப்பூசித்தான். சூரியன் உதித்தபின்பு, அவன் யாரையும் காணாதவனாய், விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக்கடவுளையே கண்டு, அதிசயமுற்று, வணங்கித் தன்னூரை யடைந்தான்.

அவன் உடனே பாண்டியராசனிடம்போய், "எங்கள் அரசரே! நான் வாணிகஞ்செய்து வரும்வழியில் கடம்பவனத்திலே ஒரு விமானத்தையும் அதில் ஒரு சிவலிங்கத்தையும் கண்டேன். தேவர்கள்வந்து, அந்தப்பெருமானை அருச்சனைசெய்து போவதாயினர். நானும் மீண்டேன்" என்றான். பாண்டியன் அன்பும் அற்புதமும் நிரம்ப இருந்தான்.

அன்றிரவு சோமசுந்தரக்கடவுள் ஒரு சித்தராய், பாண்டியனுடைய கனவிலேதோன்றி, "கடம்பவனத்தை நகராக்குதி" என்றுசொல்லி மறைந்தருளினர். அவன் விடியற்காலத்தில் விழித்தெழுந்தான். மந்திரிகட்கும், முனிவர்க்கும் கனவைச்சொல்லி, கனவிற் கேட்டதும், கனவிற் கண்டதும் ஒத்திருத்தல்கண்டு சந்தோஷித்தான். அவன் பரிசனத்தோடு கடம்பவனஞ்சென்று பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, விமானத்தில் வீற்றிருந்தருளும் சொக்கலிங்கமூர்த்தியைக் கண்டு தோத்திரஞ்செய்துவணங்கினான். வணங்கி வலம்வந்து புறம்போந்து ஓரிடத்தில்இருந்தான்.

அப்பொழுது அரசனது ஆணையினால் காட்டைவெட்டித் திருத்தினார்கள். குலசேகரபாண்டியன் நகரம் உண்டாக்குவது எப்படி என்று யோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பரமசிவன் தாம் அவனதுகனவில் முன் எழுந்தருளிவந்தபடியே ஒரு சித்தராய் வந்தார். பாண்டியன் எழுந்து நமஸ்கரித்து அவருக்கு ஆசனம்கொடுத்தான். சித்தர் ஆலயம், மண்டபம், கோபு

ரம் முதலியவற்றை இப்படிச்செய்யவேண்டும் என்று சொல்லி மறைந்தருளினர். பாண்டியராசன் சிற்பநூலில் வல்லவர்களைக் கொண்டு, சித்தமூர்த்திகள் கூறியபிரகாரம் கோயில் முதலியவற்றை அமைப்பித்தான். அப்பட்டணத்துக்கு வடகிழக்கில் தனக்கு ஒரு மாளிகை உண்டாக்குவித்தான். அதன்பின் அந்நகரத்துக்குச் சாந்திசெய்ய நினைத்தான். சோமசுந்தரக்கடவுள் அதனைத் திருவுள்ளங்கொண்டு தமது திருச்சடையில் தரித்திருக்கும் சந்திரகலையிலுள்ள அமிர்தத்தைக் கங்காஜலத்தோடு கலந்து சிதறினர். அது அந்த நகரம்முழுதும் பரந்து தன்மயமாக்கிச் சாந்திசெய்தது. அது மதுரமயமான தன்மையினல் மதுராநகரம் எனப்பெயர்பெற்றது.

குலசேகரபாண்டியராசன் ஆதிசைவரைக் காசிப்பதியினின்றும் கொண்டுவந்து தாபித்தான். அவர்கள் கோயிற்கிரியைகளை வழுவாது நடத்திவந்தார்கள். அரசன் மனுநீதிதவருது அரசுசெய்தான். அரசுசெய்து வருநாளில், திருக்கோயிலினுட் சென்று சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து, அவரோடு இரண்டறக்கலத்தலாகிய பரமுத்தியையடைந்தான்.

---

## ௧௫. திருவாப்பனூர்.

முன்னொருகாலத்திலே, சோழாந்தகன் என்னும் பாண்டியராசன் ஒருவன் இருந்தான். அவன் தனது பிரசைகளின் பொருட்டே எந்தக்கருமத்தையுஞ் செய்பவன். சிவபக்தி நிறைந்தவன். அவன் தினந்தோறும் சிவலிங்கதரிசனம்செய்தே போசனஞ்செய்யும் நியமம்உள்ளவன். இந்த நியமத்தினின்றும் அவன் ஒருகாலும் தவறியதில்லை.

ஒருநாள் அந்தப் பாண்டியராசன் தனது பரிசனங்களுடன் மிருகவேட்டையைக்குறித்து, ஒருவனஞ்சென்றான். அந்த வனத்திலே பன்றி, மான், புலி, யானைமுதலிய பல மிருகங்களைக்கொன்று, நெடுநேரம் வேட்டையாடினன். ஒரு மான் வீரருடைய அம்புகளுக்கும் அகப்படாது, மிக வேகமாய்ஓடியது. வேட்டைநாய்களும், அந்த மானுக்குப்பின்னேஓட இயலாதனவாயின. சோழா

ந்தகபாண்டியன் தனியே தொடர்ந்துசென்று, ஒரு அம்பைச் செலுத்திக் கொன்றான். அரசன் பசி தாகமும் வேட்டையாடிய களைப்பும் மிகுந்து, ஒரு மரநிழலிலே படுத்திருந்தான். அவனோடு வந்த பரிசனங்கள் அவனைத்தேடிக் காணுதவர்களாய் வருந்தினார்கள். பின்பு, அரசன் மரநிழலிலே படுத்திருப்பதை அறிந்து, அங்கேபோய் அவனுக்கு அறிவுவருவதற்கேற்ற செயல்களைச் செய்தார்கள். சிறிதுநேரம்சென்றவுடன் நல்லறிவுஉண்டாயிற்று.

மந்திரிமார்கள் அவனைநோக்கி, "அரசர்பெருமானே! நீர் வேட்டையாடிக் களைத்துவிட்டீர்; சிறிது போசனம் செய்தால் உமது களைப்பு நீங்கிவிடும்" என்றார்கள். அரசன் மந்திரிமார்களைப்பார்த்து, "சிவலிங்கதரிசனம் செய்யாமல் அமிர்தமாயினும் உண்ணமாட்டேன்" என்றான். மந்திரிமார்கள் "அரசே! நீர் இப்பொழுது உணவு உட்கொள்ளாவிடின், உமது தேகத்துக்கு அபாயம்வரும்" என்று சொன்னார்கள். வேந்தன் "மந்திரிகளே! நான் சிவலிங்கதரிசனம் செய்யாமல் போசனம் செய்யும்வழக்கம் இதுவரையும் இல்லை; என்னுடைய உயிருக்கு இறுதிவந்தாலும், இந்த விரதத்தை விடமாட்டேன்" என்று கூறினன். அரசனுடைய மனஉறுதியை மந்திரிமார்கள் அறிந்து, ஓரிடத்திலேகூடி, "நமது அரசர் இந்தவனத்தில் சிவலிங்க தரிசனம் செய்வது எப்படி முடியும்? அவர் தமது விரதத்துக்குப் பங்கஞ் செய்யமாட்டார். சிறிது நேரத்துள் அவருடைய உயிர் உடம்பை விட்டு நீங்கினும் நீங்கும்; நாம் ஒரு உபாயத்தினல் அரசருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்று முடிவு செய்தார்கள்.

பின்பு அவர்கள் ஒரு கொன்றைமரத்தடியில் மணலைக் குவித்துத் தண்ணீர் தெளித்து, ஒரு ஆப்பை அடித்தார்கள். அதன் மேல் ஆடை, ஆபரணம், மாலை, சந்தனம் முதலியனசாத்தி அலங்கரித்தார்கள். அந்த முளை பார்ப்பவர்களுக்குச் சிவலிங்கம் போல விளங்கிற்று. பின்பு அமைச்சர்கள் அரசனை அடைந்து, "இந்த வனத்திலே ஒரு கொன்றைமரத்தடியிலே, சிவலிங்கம் ஒன்று இருக்கின்றது" என்று சொன்னார்கள். அரசன் அதனைக் கேட்டுச் சந்தோஷமுற்றான். மந்திரிகள் சிவலிங்கத்தைத் தரிசிப்பிக்கும்பொருட்டு, அரசனை அழைத்துக்கொண்டு சென்று

ர்கள். சிவபக்தியிற் சிறந்த பாண்டியராசன்போய் சிவலிங்கப் பெருமான் இவரே என்னும் மெய்ஞ்ஞானக் கருத்தோடு, தரிசித்தான். தரிசனம் முடிந்தவுடன் மந்திரிமார் அவனுக்கு உணவு கொடுத்தார்கள். அரசன் உண்டு பசியும் களைப்பும் நீங்கினான். பின்பு மந்திரிமார்களை நோக்கி, "இந்தச் சிவலிங்கப்பெருமானுக்கு ஓர் கோயில் உண்டாக்கவேண்டும்; இக்காட்டையும் அழித்து நாடாக்கவேண்டும்,, என்று கூறினான். மந்திரிமார், "நாம் செய்த சூழ்ச்சி அரசனுக்குத் தெரிந்துவிடுமே" என்று பயந்து ஓடி ஒளித்தார்கள். பின்பு அரசன் சிவலிங்கத்தைப் பார்த்தான். அது ஆப்பாக இருத்தலைக்கண்டு பெருந்துக்கங்கொண்டு, "இந்தப்பாவிகள் என் விரதத்தைக் கெடுத்து விட்டார்களே! இவர்களைப்போன்ற பாவிகள் இதுவரை இருந்ததாகக்கேள்விப்படவுமில்லையே! இவர்களுக்கு எவ்வளவு தண்டனை செய்தாலும் பாவமில்லை!" என்று சொல்லி வாளை எடுத்தான். எடுத்துக்கொண்டு, மந்திரிமார்களை அழைத்துவரும்படி ஏவலருக்குக் கட்டளையிட்டான். ஏவலர்கள் மந்திரிமார்களைப் பல விடங்களில் தேடியும், அகப்படவில்லை. அவர்கள் அரசனுடைய முன்னிலையில்வந்து சொன்னார்கள்.

அரசன் மிகவருந்தி "கிருபாமூர்த்தியே! அடியேன் இன்றுவரை என்னுடைய நியமத்தைத் தவறாது முடித்துள்ளேனாயின், இந்த ஆப்பானது சிவலிங்கரூபமாக விளங்குதல்வேண்டும்; அப்படி இல்லையேல், இப்பொழுதே இந்த வாட்படையினால் என் கழுத்தை வெட்டி உயிர்துறப்பேன்" என்று கூறினான். உடனே சிவபெருமானுடைய திருவருளினால் அந்த ஆப்பானது சிவலிங்கரூபமாயது. அரசன் அது கண்டு ஆனந்தக்கூத்தாடிச் சிவபெருமானைத் துதித்தான். மந்திரிகள் இதனை அறிந்து அரசனைச் சமீபித்தார்கள். பாண்டியன் அவர்களை உபசரித்தான். அனைவரும் மகாசந்தோஷம் கொண்டார்கள்.

பாண்டியராசன் காட்டைவெட்டுவித்து நாடாக்கி, ஒரு திருக்கோயிலையும்அமைப்பித்தான். அவ்வூருக்குத் திருவாப்பனூர் என்று பெயர்சூட்டி, பற்பல சாதிகளையும் குடியேற்றினான். திருக்கோயிலிலே நித்திய நைமித்தியங்களைச் சைவாகமவிதிப்படி செய்வித்து இனிதாக வாழ்ந்திருந்து முத்தியடைந்தான்.

## கசு. நாகபட்டணம்.

ஆதிசேடன் தனது மனைவியோடு பூவுலகம்சேர்ந்து வசிட்டமுனிவரைக்கண்டு, "புத்திரப்பேற்றைவேண்டிவந்தேன். அதற்கேற்ற தவத்தைக் கூறியருளுக" என்று வணங்கினன். "ஆதிசேடனே! சிவபூசைசெய்தலே மேலான தவமாகும். அது அனைத்தையும் கொடுக்கவல்லது. நீ அன்புடன் அதனைச்செய்குதி. உன் எண்ணம் முற்றுப்பெறும்" என்று வசிட்டமுனிவர் கூறினர். ஆதிசேடன் திருக்காரோணம் என்னும் ஸ்தலத்தில் வந்து, தேவதீர்த்தம் முதலியவற்றில் ஸ்நானஞ்செய்து, சிவபெருமானுடைய திருக்கோயிலினுட்புகுந்து, மனமுருகும்படி வணங்கினன். ஒரு ஆலயத்தை உண்டுபண்ணி, சிவலிங்கஸ்தாபனஞ்செய்து சிவாகமவிதிப்படி பூசித்தான். காலையில் கும்பகோணத்திலும், மத்தியானத்தில் சம்பகாரணியத்திலும், மாலையில் பாம்புரத்திலும், அர்த்தயாமத்தில் காரோணத்திலும் சென்று சிவபெருமானைத் தரிசித்தான். இவ்வாறு தரிசனஞ்செய்துவரும் ஆதிசேடனுக்குச் சிவபெருமான் கிருபைசெய்தருளினர். அவனது மனைவி கருப்பமுற்றாள். ஆதிசேடன் கும்பகோணம் முதலிய நான்கு தலங்களிலும் போய் வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, மனைவியோடும் தனது இருப்பிடத்தை அடைந்தான்.

அவள் ஒரு புத்திரியைப்பெற்றாள். தமது பிள்ளை மூன்று தனமுடையதாயிருத்தலைத் தாய் தந்தையர்கண்டு கவலை கொண்டார்கள். அப்பொழுது "இப்பெண் சிலநாளில் காரோணநாதருடைய இடப்பாகத்தில் வீற்றிருக்கும் நீலாயதாக்ஷி அம்மையை அருச்சித்து வணக்கஞ்செய்யின் அவரது கிருபையினால் ஒரு அரசன் எதிர்ப்படுவான். அவனைக் காணும்பொழுது ஒரு தனம் மறையும். பின்னர் அவனேவந்து விவாகஞ்செய்வான்" என்று ஒரு அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதைக்கேட்ட சேடனும் மனைவியும் சந்தோஷமுற்றார்கள். புதல்வி வளர்ச்சியுற்றிருந்தாள்.

சேடன் தனது புத்திரியைநோக்கி முன் நிகழ்ந்தவைகளைக் கூறி, அவளைச் சேடியர்களோடும் திருக்காரோண நகரத்துக்கு அனுப்பினன். அவள் அந்த ஸ்தலத்திற்போய், பல தீர்த்தங்களிலும் தோய்ந்து, தேவியைப் பலநாளாகப் பூசித்துத் தோத்திரஞ்

செய்து வணங்கிக்கொண்டு இருந்தாள். உமாதேவியார் பேரருள் செய்தார். அவள் ஒருநாள் சேடிமார்களுடன் சர்வபுஷ்கரணி தீர்த்தத்தின் பாங்கர் உலாவினாள். அப்பொழுது சூரியகுலத்தரசனாகிய சாலீசுகன் என்பவன் காரோணம்போய்ச் சிவபெருமானை வணங்கி, சர்வதீர்த்தக்கரையில் மந்திரிகளுடன்வந்தான். அங்கே நின்ற சேடன்புத்திரி, அரசனைக்கண்டாள். கண்டவுடன் மூன்று தனங்களுள் நடுத்தனம் மறைந்தது. அவள் நாணமுற்றுத் திகைத்து நின்றாள். விதிகூட்டுதலினாலே அரசன் அவளைக்கண்டு விருப்பங்கொண்டான். அக்கன்னிகை நடந்தவைகளைப் பிதாவுக்குச் சொல்லும்பொருட்டுச் சேடிமார்களோடு சென்றாள். அரசனுந் தனது இருப்பிடத்தை அடைந்தான்.

மற்றைநாட்காலையில், அரசன் திருக்காரோணத்துக்குப் போய், சிவபெருமானை நமஸ்காரஞ்செய்து நின்றான். தமது சந்நிதானத்தில் நிற்கும் அரசனுக்குத் தேவநாயகர் கிருபைசெய்து, "நீ விஷ்ணுவிடம் செல்லுதி" என்று கூறியருளினார். சாலீசுகன் திருக்காரோணநாதர் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கின்படி, விஷ்ணுமூர்த்தியினுடைய கோயிலைச்சார்ந்து, அவரை வணங்கி நின்றான். விஷ்ணுமூர்த்தி தோன்றியருளி, "அரசனே! பயப்படாதே, காரோணநாதருக்கு வடபாகத்தில் ஒரு பிலம் இருக்கிறது. நீ அப்பிலத்தினூடாகச் செல்லுகில், நாகலோகத்தை அடைவாய், அங்கே இருக்கும் ஆதிசேடன் உன்னைஉபசரித்துத் தனது மகளை விவாகஞ்செய்து தருவான்" என்றார். அரசன் விஷ்ணுவை வணங்கிக்கொண்டு, அப்பிலத்தினுள்ளாகப் புகுந்து நாகலோகத்தைச் சேர்ந்தான்.

இவனுடைய நிலை இவ்விதமாக, முன்னர்ச்சென்ற கன்னிகை பிதாவை வணங்கி, "ஐயா! காரோணத்தில் விளங்குகின்ற சர்வதீர்த்தக்கரையில் ஒருவர் வந்தார். அவரைக் கண்டவுடன் ஒரு தனம் மறைந்தது. இதை உங்களுக்குக் கூறவந்தேன்" என்றாள். இவ்வார்த்தையைக்கேட்ட சேடன் மனமகிழ்ந்து, "அவனே உனக்கு நாயகனாவான்" என்றான். அப்பொழுது சாலீசுகன் சேடனுக்கு எதிரேசென்றான். சேடன் அவனைநோக்கி, "இங்கே வந்த நீ யாவன்? வந்த கருமம் யாது? சொல்லுக" என்றான். அரசன் என்பெயர் "சாலீசுகன், உன்னிடத்தில் ஒன்றை நினைத்து வந்தேன்" என்றான். சேடன் அதற்கெதிராக ஒன்றும்

கூருதவனுய்ச் சந்தோஷங்கொண்டான். "ஒருமுலை மறையக் காட்டிகொடுத்தவன் இவனு?" என்று சேடன் தனது புத்திரியை நோக்க, அவளும் "இவரே உமது மருகர்" என்று சொல்லாது சொல்லி நின்முள். நாகராசன் சுற்றத்தார்முதலிய யாவரையுங் கூட்டித் தனது மகளைச் சாலீசுகனுக்கு முறைப்படி தத்தஞ் செய்து கொடுத்தான். தனது அரசுரிமைகள் எல்லாவற்றையும் மருமகனுக்காக்கினுன். திருக்காரோணத்தைச்சார்ந்து ஒருதீர்த்த முண்டுபண்ணி, ஸ்நானஞ்செய்து முன்னர்த் தான் பிரதிட்டை செய்த சிவலிங்கப்பெருமானைத் தினந்தோறும் வழிபாடுசெய்து கொண்டிருந்தான்.

மாசிமாதத்திலே அபரபக்கச் சதுர்த்தசிகூடும் நாளாகிய சிவராத்திரிதினத்தில், பரமபதியைப் பூசித்தற்குவிரும்பி, சாயங் காலத்தில் ஸ்நாநஞ்செய்தான். முதல்யாமத்தில், பெருங்கருணைத் தடங்கடலைக் கும்பகோணத்திலே கீழைக்கோட்டத்திலும், இரண்டாம் யாமத்திலே சண்பகவனத்திலும், மூன்ரும் யாமத்தி லே திருப்பாம்புரத்திலும், நான்காம் யாமத்திலே திருக்காரோ ணத்திலும் பூசித்தான். இவ்வாறு பூசைசெய்யும் புண்ணிய புரு டனுகிய சேடன் தரிசிக்குமாறு சோமாஸ்கந்தமூர்த்தியாகக் காட் சிகொடுத்தருளிஞர். நாகராசன் விரைந்தெழுந்து வலம்வந்து வணங்கினுன். சிவபெருமான் "உனக்கு வேண்டியவரங்களைக் கேட்குதி" என்று திருவாய்மலர்ந்தார். சேடன் "இந்த நகரமும் இலிங்கமும் தீர்த்தமும் அடியேனுடைய நாமத்தைப் பொருந்து தல்வேண்டும். தேவரீர் இந்த இலிங்கத்தில் எப்பொழுதும் நீங்கா திருந்து அடியார்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்தருளவேண் டும். அடியேனும் உமது திருவடிகளில் கலத்தல்வேண்டும்." என்று வேண்டினுன். சிவபெருமான் இவ்வரங்களைக்கொடுத்து மறைந்தருளினுர். சேடன் பரமுத்தியடைந்தான்.

அத்தினம் முதலாக அத்தலத்தைத் திருநாகைக்காரோணம், நாகநகர், நாகபட்டணம் என்றும், தீர்த்தத்தை நாகதீர்த்தம் என் றும், மூர்த்தியை நாகநாதர் என்றும் சொல்லுவார்கள்.

நாகதீர்த்தத்தில் மூழ்கி, நாகநாதரைத் தரிசிப்பவர்கள் நாக விடத்தினுல் வருந்துன்பத்தை அடையமாட்டார்கள்.

## கஎ. திருப்பெருந்துறை.

சுகுணபாண்டியன் சிவபுரத்தில்எழுந்தருளியிருக்கும் ஆன்மநாதரைப் பூசிப்பதற்காகக் காசியிலிருந்து முந்நூறு பிராமணர்களை வருவித்தான். அப்பிராமணர்களை வணங்கி முந்நூறு பொற்றட்டங்களில் வஸ்திரங்களையும் தக்ஷிணையையும் வைத்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். அப்பொழுது ஒரு பீதாம்பரம் ஏற்பவரின்றி எஞ்சியது. அரசனும் பிராமணர்களும் பலதரம் எண்ணியும் ஒருவரைக்காணாது மயங்கினார்கள். அப்பொழுது சிவபெருமான் ஒரு பிராமணவடிவங்கொண்டு வந்து, "முந்நூறு பேருள் யானும் ஒருவன்" என்றுகூறிப் பாண்டியனது நெற்றியில் விபூதிசாத்தியருளினர். பாண்டியன் எஞ்சியிருந்த வஸ்திரத்தையும் தக்ஷிணையையும் கொடுத்தான். அவர் ஏற்று, அப்பிராமணர்களோடு தாமும் ஒருவராய் விளங்கினர். பாண்டியன் அவர்களுக்கு மாளிகைகளை உண்டுபண்ணிக்கொடுத்து, அவ்வூரையும் மானியமாகப் பத்திரமும் பிறப்பித்துக் கொடுத்துவிட்டு, மதுரையை அடைந்தான். அந்தணர்கள் ஆன்மநாதரை அன்புடன்பூசித்து வாழ்ந்திருந்தார்கள்.

அவர்கள் ஆன்மநாதருடைய பணிவிடையை இடையறாது செய்துவருதலினாலே தமது சிறுவர்களைப் படிப்பித்தற்கு நேரமின்றிக் கடவுளைப் பிரார்த்தித்திருந்தார்கள். இருக்குநாளிலே, ஆன்மநாதர் பெருங்கருணையினால், ஒரு வயோதிகப்பிராமணராய், அவ்வேதியர்களது சபையில் "சிவசிவ" என்று சொல்லிக்கொண்டு வந்தார். வேதியர்கள் அவரை ஆசனத்தில் இருத்தி வணங்கினார்கள். ஆன்மநாதர் வேதியர்களை நோக்கி "நாம் சிறுவர்களுக்குச் சாத்திரங்களைப் போதிப்பதில் வல்லோம்" என்று கூறியருளினர். அவர்கள் அவரைத் தம்புதல்வர்களுக்கு உபாத்தியாயராக நியமித்து ஒவ்வொருநாளுக்கு முறையே ஒவ்வோர் வீட்டாராக அன்னபானாதிகளை அளித்து உபசரித்துவந்தார்கள். உபாத்தியாயர் பிள்ளைகளைக் கூட்டிச் சுத்தமாகிய ஓரிடத்திலிருந்து, படிப்பித்துவருவாராயினர். பெற்றோர் சிறுவர்களுடைய கல்வித் திறமையை நோக்கிச் சந்தோஷங்கொண்டார்கள்.

அந்நாட்டிலே வரதுங்கபாண்டியன் சுவர்க்கமடைந்தான். அவன் மகன் கௌமாரபாண்டியன் அரசாட்சி செய்தான்.

குறுநிலமன்னாகிய ஹுண்டாக்கன் என்பவன் பாண்டியனுடன் நட்புக்கொண்டான். எங்கள் ஆன்மநாதரைப்பூசிக்கும் மறைய வர்களது நிலம்முற்றையும் தனது நிலமென்று கவர்ந்து கொண் டான். அப்பொழுதுபிராமணர்கள் வருந்தி இதைப் பாண்டிய னுக்கு முறையிடுவோம் என்று நிச்சயித்து எழுந்தார்கள். உபாத் தியாயர் அதை அறிந்து, "நாமும் உம்முடன் வருதற்கு விரும்பி னேம்" என்றுசொல்லிச் சென்றார். எல்லோரும் குருந்தமரத்தடி யிற் சென்று ஆன்மநாதரை நமஸ்கரித்து விடைபெற்று மதுரை யைநோக்கி நடந்து சென்றார்கள். செல்லும் வழியில் உபாத்தி யாயர் பொதிசோறும் தண்ணீரும் கொடுத்து அந்தணர்களு டைய இளைப்பை ஆற்றிச் சென்றார். அவர்கள் திருவாலவாயை அடைந்து சோமசுந்தரக்கடவுளை வணங்கிக் கௌமாரபாண்டிய னுடைய சபையைச் சேர்ந்தார்கள்.

பாண்டியன் அந்தணர்களைக் கண்டவுடன் எழுந்து நமஸ்க ரித்து ஆசனங்களில் இருத்தி க்ஷேமம் வினவினன். "எமது நிலத் தை ஹுண்டாக்கன் என்பவன் கவர்ந்துகொண்டான். இவ்விடை யூற்றைச் சொல்வதற்காக இங்கே வந்தோம்" என்று பிராமணர் கள் கூறினர்கள். அரசன் பிராமணர்களை நோக்கி, "உங்கள் நிலம் என்பதற்குச் சாதனம், ஆட்சி, சாட்சி என்னும் மூன்ற னுள் ஒன்றேனுங் காட்டுங்கள்" என்றான். அதற்குப் பிராமணர் கள் "ஆளுகை இப்பொழுது அவனுடையதாயிற்று. சாதனத்தை யுங் கவர்ந்துகொண்டான். அயலார் சாட்சியுண்டு. அவர்கள் ஹுண்டாக்கன் கொன்றுவிடுவான் என்று அஞ்சி நேரே சொல் லார்கள்" என்று கூறினர்கள். பாண்டியன் ஹுண்டாக்கனைப் பார்த்து, "இதற்கு நீ சொல்வது யாது" என்று வினவினன். ஹுண்டாக்கன் "இப்பிராமணர்கள் அப்பூமியைத் தம்முடைய தென்று சொல்லுவார்களாயின், முயலுக்குங் கோடு உண்டு போலும்!" என்றான். "அப்படியாயின் அச்சிவபுரம் உன்னுடைய தென்பதற்கு நீ ஆதாரம் காட்டு" என்று வினவினன். "அதற்கு அவன் தொன்றுதொட்டுள்ள ஆட்சியே ஆதாரம்" என்றான். "அதற்கு அநுபவம் சொல்லு" என்று அரசன் கேட்டான். அவன் "இரண்டு பனையளவு ஆழமாகவெட்டினாலும், சிவபுரத் திலே தண்ணீருருது. இதுவே என்னுடைய அநுபவம்" என்று கூறினன். அரசன் பிராமணர்களைநோக்கி "இனி நீங்கள் உங்கள்

அனுபவத்தைச் சொல்லுங்கள்" என்றான். அந்தணர்கள் அனுபவம் சொல்லமுடியாது மயங்கினார்கள். உபாத்தியாயராகிய கிழப் பிராமணர் "சிவபுரத்தில் மண்வெட்டிகொண்டு வெட்டினால், அவ்வெட்டுவாய்தோறும் நீரூறும். இதுவே நான் சொல்லும் அனுபவம்" என்று கையையுயர்த்திக் கூறினர். கூறவே, தன் மனக்கருத்துமுழுதும் நிறைவேறிவிட்டது என்று லுண்டாக்கன் சிரித்தான். பிராமணர்கள் எல்லாம், "நெடுநாளாக நமது வீடுகள் தோறும் உண்டுதிரிந்த இந்தத் தடுமாறுகிழவன் என்ன சொன்னான்; இவன் வெட்டுவாய்தோறும் நீர்காட்டவல்லவனு?" என்று பதைபதைத்தார்கள். அப்பொழுது பாண்டியன் "நீர் கூறியது உண்மையா?" என்று கேட்டான். உபாத்தியாயர் "உண்மையே! உண்மையே! முக்காலும் உண்மையே!" என்றார். அப்பொழுது பாண்டியன் லுண்டாக்கனைப்பார்த்து, "உண்மை என்றால் செய்வது என்னை?" என்றான். "உண்மையேயாயின் அப்பூமி அவர்களுக்கே உரியது" என்றுசொன்னான்.

பின்பு பாண்டியன் வேதியர்களை முன்னே அனுப்பிவிட்டு, தானும் சிவபுரத்தை அடைந்தான். லுண்டாக்கனும் சென்றான். பாண்டியன் "லுண்டாக்கனே! ஓரிடத்தில் வெட்டுதி" என்று கட்டளையிட்டான். அவன் மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு, மேடான இடத்தில் வெட்டினான். சிவபெருமான் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களையும் அங்கே அழைத்தருளினர். வெட்டிய இடத்திலிருந்து அவன் முகங்கலங்க நீர் விரைந்துபாய்ந்தது. பல இடங்களிலுஞ்சென்று வெட்டினான். வெட்டுந்தோறும் நீர் பெருகி, எங்கும் பரவுதலினாலே சிவபுரம் பெருந்துறை என்னும் பெயர்பெற்றது. கௌமாரபாண்டியன் பேருவகை உடையவனானன்.

அவன் மறையவர்களை நோக்கி "இவ்விதம் அறிவித்தவரை இங்கே அழைத்துவாருங்கள்" என்றான். அவர்கள் சென்று உபாத்தியாயருடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து, உங்களை அரசன் அழைத்தான். அங்கே வருதல்வேண்டும் என்றார்கள். அவர் "அரசனிடத்தில் இங்கே எமக்கு ஆவது என்னை? என்று கூறிக் குருந்தமரத்தடியிற்சென்று மறைந்தருளினர். அந்தணர்கள் மனம் திகைத்தார்கள். அங்கே மறைந்தவர் ஆன்மநாதரே என

உணர்ந்து உவந்து துதித்தார்கள். பாண்டியனது முன்போய் "வழக்காடிவென்ற நமது ஆன்மநாதர் குருந்தமரத்தடியிற்சென்று மறைந்தருளினர்" என்று சொன்னர்கள். அரசன் கைகளைச் சிரசிற்கூப்பி உவகைபூத்தான். துண்டாக்கனுக்குக் கொடுத்திருந்த தனது உரிமைகளை மாற்றினன். மிகவுங் கோபித்து, அப்பாவியைச் சிறைப்படுத்தினன். சிவபெருமானிடத்தில் மெய்யன்புடைய அந்தணர்களுக்குச் சிவபுரநிலத்தையும் பல பொருள்களையுங்கொடுத்து வணங்கினன். ஆலயத்தையடைந்து ஆன்மநாதரையும், யோகாம்பிகையையும் பணிந்து மதுராபுரியை அடைந்தான்.

---

## கஅ. பழநி.

தாமரை ஆசனத்தில் இருப்பவரும், நான்கு முகங்களையுடையவரும் ஆகிய பிரமதேவர் சத்திய உலகத்திலே சபாமண்டபத்தின் நடுவில் வீற்றிருந்தார். நாரதமுனிவர் அந்தச்சபையை அடைந்து, மகதியாழைக் கையில்எடுத்துச் சிவபெருமானுடைய தோத்திரங்களை அமைத்துப் பாடினர். பிரமதேவர் தலைகளை அசைத்துத் தமதுகையில் இருந்த மாம்பழமொன்றை அவர்கையிற் கொடுத்தார். நாரதமுனிவர் அதனைஏற்று, "இது சிவபெருமானுக்குஆகும்" என்றுகூறினர். "பிரமதேவர் நம்முடைய கருத்தும் அதுவேயாகும்" என்றுகூறினர். நாரதமுனிவர் பிரமதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு, திருக்கைலாசமலையை அடைந்து, பரமசிவனுடைய திருமுன்னிலையில் அப்பழத்தை வைத்து வணங்கினர்.

பரமபதி மாம்பழத்தைத் திருக்கரத்தில் எடுத்து, குமாரசுவாமியையும் விநாயகக்கடவுளையும் திருநோக்கஞ் செய்தருளினர். அவர்கள் அப்பழத்தைத் தமக்குக் கொடுக்குமாறு வேண்டினர்கள் "ஒருகணத்தில் பூமியை வலம்வருபவருக்கே இப்பழம் கிடைக்கும்" என்று சிவபெருமான் கூறியருளினர். குமாரக்கடவுள் மயில்வாகனத்தின்மீது ஏறித் திருக்கைலாச மலையை நீங்கிப் பூவுலகத்தை அடைந்தார். அவ்வாறாகிய சமயத்தில் விநாயகக்கடவுள் தாய்தந்தையர்களை வலம்வந்து வணங்கி, "எல்லா உலகங்களிலும், அவ்வுலகங்களிற் பொருந்திய பலவகைப்பட்ட உயிர்களிலும், ஒன்றி நிறைந்து ஓங்கிவிளங்கும் பரஞ்சுடர் தேவரீரன்றோ? தேவரீர் அல்லாத வேறுமொருபொருள் இருக்கின்றதா?

தேவரீரை வலம்வந்தது உலகை வலம்வந்ததனோடொக்கும். ஆகையாற் கனியைத் தந்தருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அக்கனியை விநாயகக்கடவுளுக்குக் கொடுத்தருளினர்.

சுப்பிரமணியக்கடவுள் ஒருநொடியில் உலகை வலம்வந்து திருக்கைலாசமலையை அடைந்தார். விநாயகருடைய திருக்கரத்தில் மாம்பழம் இருப்பதைக் கண்டார். பிணக்குற்றார்போல் மகுடம், குண்டலம் முதலிய ஆபரணங்களையும், ஆயுதங்களையும் நீக்கி, ஒரு தண்டாயுதத்தைத் திருக்கரத்திலெடுத்துக் கொண்டு, கௌபீனதாரியாய், தென்றிசையை நோக்கிச்சென்று தேவகிரியை அடைந்தார். அங்கே தவஞ்செய்து கொண்டிருந்த தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் வரங்களைக் கொடுத்தருளினர். பின்பு திருவாவினன்குடிக்குப்போய்ச் சிவகிரியில் வீற்றிருந்தருளினர். திருவாவினன்குடியில் அரியதவஞ்செய்து கொண்டிருந்த இலக்குமிதேவிக்கும், காமதேனுவுக்கும், சூரியனுக்கும் தம்முடைய திருவுருவைக் காட்டியருளிப் பல திருவிளையாடல்களைச் செய்து கொண்டிருந்தார்.

பல வாத்தியங்கள் இயம்ப, தேவர் முதலியோர் சேவிக்க, சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் இவர்ந்து வந்து திருவாவினன் குடியிலுள்ள திருக்கோயிலினுள்ளாகச் சென்றருளினர். சுப்பிரமணியக்கடவுள் தமது தந்தையையும் தாயையும் வணங்கினர். சிவபெருமான் அவரைத் தமது இருகரங்களாலும் எடுத்து, திருமார்புடன் அணைத்து, உச்சிமோந்து, உமாதேவியாருடைய திருக்கரத்திற் கொடுத்தருளினர். அம்மையார் திருப்புன்முறுவல்செய்து, "முருகா! எம்மிடத்துவருக; அருட்கடலில்விளைந்தமுத்தே வருக; திருவாவினன் குடியிற்றிருவே வருக வருக" என்று வாரிஎடுத்துத் தோள்மேல் அணைத்துச் சிவபெருமானுடைய திருக்கரத்தில் கொடுத்தருளினர். பரமசிவன் அவரைத்தமது திருமடியில்வைத்து "நீ என்றும் இளமையுடையாய்; எல்லா அறிவும் உள்ளாய்; மாங்கனியும் ஒரு கனியோ? நீயே பேரின்பச்சுவையை இடைவிடாதுகொடுக்கும் சிவஞானப் பழமாகும். அங்ஙனமுள்ள பழநீயாகவும் உனக்குவேறு பழமும் வேண்டுமா?" என்று சொல்லியருளினர். முருகக்கடவுள் சிவ

பெருமானையும் உமையம்மையாரையும் சைவாகம விதிப்படி பூசித்துநின்றார்.

பரமசிவனும் தேவியாரும் "பழநீ" என்று திருவாய்மலர்ந் தமையால், திருவாவினன்குடி அன்று தொடங்கிப் "பழநி" எனப் பெயர்பெற்றது. கந்தசுவாமியும் பழநியாண்டவர் எனப் பெயர்பெற்றார்.

---

## கக. மயூரகிரி.

சூரன், பதுமன், சிங்கன், தாரகன் என்னும் நால்வரும் பாற்கடலாற் சூழப்பட்ட சாகத்தீவை அரசாட்சிசெய்தார்கள். அவர்கள் உயர்ந்த பதவியைப்பெற விரும்பிக் காஞ்சீபுரத்தை அடைந்தார்கள். அத்தலத்தில் இருந்து, சூரன் சுப்பிரமணியக்கடவுளுக்கு மயில்வாகனமாக விரும்பித் தவஞ்செய்தான். பதுமன் அவருக்குக் கோழிக்கொடியாகவிரும்பித் தவஞ்செய்தான். சிங்கனுந் தாரகனும் முறையே துர்க்கைக்கும் ஐயனாருக்கும் சிங்கவாகனமும் யானைவாகனமு.மாகக் கருதித் தவஞ்செய்தார்கள்.

முருகக்கடவுளைத் தரிசிக்கும்படி கந்தகிரியிற் சென்ற பிரமவிஷ்ணுக்கள், அக்கடவுளின் வாகனமாகிய மயிலின்முன்போய், "சூரன் முதலியோர் உம்முடைய பதவியைப் பெற்றுக்கொள்ள விரும்பித் தவஞ்செய்கின்றனர்" என்று சொல்லிச் சென்றார்கள். மயில் மனம்வருந்தி, "மகாதேவரே! அவர்கள் பூதகணநாதபதவியை அடைதல்வேண்டும்" என்று தியானித்து வணங்கியது. கடவுளுடைய திருவருள்பெற்ற கணங்கள் அவர்களை விமானத்தில் ஏற்றிக்கொண்டு சென்று கந்தமலையில் விட்டார்கள். அந்நால்வரும் பூதகணங்களோடுசேர்ந்து இருந்தார்கள். அண்டவாபரணனென்னும் பூதத்தலைவன் சூரனைக்கண்டு, "பிரமவிஷ்ணுக்கள் மயிலினிடத்துப்போய் உங்கள் தவக்கருத்தைச் சொன்னார்கள்" என்று கூறினான். சூரன் தேவர்களை வெல்லுதற்குரிய சமயம் பார்த்திருந்தான்.

ஒருநாள் பிரமவிஷ்ணுக்கள் சுவாமிதரிசனம் செய்வதற்காகக் கந்தமலையிற்போய்; அன்னத்தையும் கருடனையும் வாய்தலில்

நிறுத்தி, உள்ளே சென்றார்கள். அப்பொழுது சூரன் முதலியோர் மயிலுக்குமுன்னரே சென்று, "தேவரீருக்கு எந்தஉலகத்திலும் ஒப்புஇல்லை; பிரமவிஷ்ணுக்களுடைய வாகனங்கள் தேவரீரை இகழ்கின்றன" என்று வஞ்சமொழிகளைச் சொன்னார்கள். மயிலரசு கோபித்து, அப்பறவைகளை எதிர்த்தது. அவைகள் இரண்டும் பயந்து ஆகாயத்திற் பறந்தன. மயில் தொடர்ந்துசென்று, அவைகளைப்பற்றி விழுங்கி, வாய்தலிற் போயிருந்தது. பிரமவிஷ்ணுக்கள் வாய்தலில்வந்து தங்கள் வாகனங்களைக் காணாது வருந்தி, முருகக்கடவுளுக்கு முறையிட்டார்கள். கடவுள் மயிலை அழைத்து, "குற்றஞ்செய்யாமலிருந்த கருடனையும் அன்னத்தையும் விழுங்கியது என்னை? அவைகளைக் கக்குதி" என்று கட்டளையிட்டருளினார். மயில் நடுநடுங்கி, அவருடைய திருமுன்னே அவ்விருபக்ஷிகளையும் கக்கியது. பெருமான் பறவைகளுக்குக் கிருபைசெய்து "உங்கள் தலைவர்களுடன் சென்று வாழுங்கள்" என்று பணித்தருளினார். பிரமவிஷ்ணுக்கள் அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் பதவிகளை அடைந்தார்கள். முருகக்கடவுள் மயிலைநோக்கி "நீ இப்பொழுது செய்தகுற்றத்திற்காகப் பூமியிலே மலையாய்க்கிடக்குதி" என்று கட்டளையிட்டருளினார். மயில் மனம்வருந்தி "அடியேன் அஞ்ஞானத்தாற்செய்த குற்றத்தைப் பொறுத்தருளுக" என்று சொல்லிப்பணிந்தது. சுப்பிரமணியக்கடவுள் "பாண்டிநாட்டிலுள்ள திருப்புத்தூருக்கருகே அரசவனம் ஒன்று இருக்கின்றது. அங்கே மலையாய்க்கிடக்குதி; யாம் சிவபெருமானுடைய நெற்றிக்கண்களினின்றும் தோன்றி, உன்னிடத்தில்வந்து மோக்ஷத்தைத்தருவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். மயில் திருப்புத்தூரில் சிவபெருமானைப் பூசித்து, அரசவனத்தை அடைந்து மலையாய்க்கிடந்தது.

சுப்பிரமணியக்கடவுள் சூரனாதியரைநோக்கி, "நீங்கள் அசுரவமிசத்திற் பிறந்து உங்களுக்குக் குற்றஞ்செய்த தேவர்களை வருத்திவாழுங்கள்; அக்காலத்தில் யாம்வந்து நீங்கள் நினைத்த வரத்தைத்தருவோம்" என்று அருளிச்செய்தார். சூரனும் பதுமனும் ஒரு உடம்புஉடையவர்களாகவும், சிங்கனும் தாரகனும் சிங்கமுகம் யானைமுகம் உடையவர்களாகவும் காசிபமுனிவருக்கு மாயையிடத்திற் பிறந்தார்கள். அவர்கள் சிவபெருமானிடத்தில் அழியாத வரங்களைப்பெற்றுத் தேவர்களை வருத்தினார்கள். தேவர்

கள் சூரன் செய்யுங்கொடுமைகளைச் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ்செய்தார்கள். சிவபெருமான் தமது நெற்றிக்கண்களினின்றும் சுப்பிரமணியக்கடவுளைத் தோற்றுவித்தருளினார். கடவுள் சூரபதுமன் முதலிய அவுணர்களைச் சங்காரஞ்செய்தருளினார். சூரபதுமன் மயிலுஞ் சேவலுமாகிவந்தான். பெருமான் அவைகளை வாகனமும் கொடியுமாக்கியருளினார். சிலதினம் கழிந்தபின்னர், வள்ளியம்மையார் தெய்வயானை அம்மையார் ஆகிய இரு சத்திமார்களோடும் சூரனாகிய மயிலின்மீது ஏறி, மயூரகிரியிற் சென்றருளினார்.

உடனே அம்மலை இரண்டுகூறாய், ஒன்று மயிலும், ஒன்று மலையுமாயிற்று. மயில் சாபம்நீங்கி, அன்புமிக்கு, மனம்குழைந்து நின்றது. குமாரக்கடவுள் கிருபாநோக்கஞ்செய்தருளினார். மயில் "சுவாமீ! தேவரீர் இம்மலையில் எப்பொழுதும் வீற்றிருந்தருளல் வேண்டும்; அடியேன் தேவரீரைப்போல வடிவைப் பொருந்துதல் வேண்டும்; உலகம் இந்தமலையை *மயூரகிரி என்றும், தேவரீரை மயூரகிரிநாதர் என்றும் கூறுதல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தது. சுப்பிரமணியக்கடவுள் "அவ்விதமாகுக" என்று அருள்செய்தார்.

மயில், அம்மலையில் ஒரு திருக்கோயில்உண்டாக்கி, சுப்பிரமணியக்கடவுளைச் சத்திமாரோடும் பிரதிட்டை செய்வித்து, திருவிழாவையும் நடாத்துவித்தது. பின்பு முருகப்பெருமானுடைய கிருபையினால் அவருடைய சாரூபத்தைப்பெற்றுக் கந்தகிரியை அடைந்தது.

---

## உ0. சீர்காழி.

**த**க்கன் என்பவனுக்குப் பல புத்திரிகள் இருந்தார்கள். அவர்களுள் வினதைஎன்பாள் அழகிய சிறகுகளையுடைய கருடனைப் பெற்றாள். பக்ஷிராசாவாகிய கருடன் சர்ப்பங்களுக்குத் துன்பஞ்செய்தது. சர்ப்பங்கள் கருடனுக்கு மிகப் பயந்திருந்தன. ஒருநாள் எல்லாச்சர்ப்பங்களும் ஒருங்குகூடி, ஒவ்வொருமாதமும் ஒவ்வொருபாம்பைக் கருடனுக்குப் பலிகொடுப்பது என்று தங்களுக்குள் நிச்சயப்படுத்திக்கொண்டு, அதைக் கருடனுக்கு அறிவித்தன. கருடனும் அதற்கு உடன்பட்டது.

* இதனை இக்காலத்தில் குன்றக்குடி என ஒரு பெயரிட்டு வழங்குவார்கள்.

கடலில் வாசஞ்செய்திருந்த காளியன் என்னும் சர்ப்பம் கருடனை மதியாமலும் தனது முறைவந்தபொழுது பலிகொடாமலும் இருந்தது. கருவங்கொண்டிருந்த அந்தக் காளியனைக் கருடன் அடக்கநினைத்தது. ஒருநாள் காளியன் தலையை வெளியில் நீட்டிக்கொண்டு கிடக்கும்பொழுது, கருடன் பறந்துசென்று சிறகுகளால் அடித்தது. விஷ்ணுவினுடைய வாகனமாகிய கருடனுடைய அடியைக் காளியன் தாங்கமுடியாது, சமுத்திரத்தை நீங்கி யமுனைநதியை அடைந்திருந்தது.

காளியன் அந்நதியில் விஷத்தைக்கக்கியது. காளியனும் மற்றையசர்ப்பங்களும் மூச்சுவிடும்போது, எழுந்த விஷாக்கினியால் யமுனைக்கரையில் இருந்த மரஞ்செடிமுதலியவை துஞ்சின. ஒரு கடப்பமரமாத்திரம் துஞ்சாது நின்றது. ஒருநாள் கிருஷ்ணரும் அவருடைய தோழர்களும் யமுனைக்கரையை அடைந்தார்கள். விஷத்தின் வேகத்தினல் கிருஷ்ணரொழிந்த மற்றெல்லோரும் மயங்கி விழுந்தார்கள். பசுக்களும் கன்றுகளும் அறிவழிந்தன. கிருஷ்ணர் கோபங்கொண்டு, விஷத்தினற் கொதிக்கின்ற யமுனையிற்குதித்துச் சலத்தைக் கலக்கினர். காளியன் தன் விஷப்பற்களாற் கிருஷ்ணரைக்கடித்து, வாலாற்சுற்றியது. அப்பொழுது இடையருடன் பலராமர் அங்கேவந்தார். அவர்களும்விஷத்தினல் மயங்கினர்கள். கிருஷ்ணர் காளியனுடன் பெரும் போர்செய்து அதனுடையதலைமீதுஏறிநின்று, நடனஞ்செய்தார். அதைக்கண்ட தேவர்கள் கண்ணபிரான்மீது கற்பதருவிலுள்ள புஷ்பங்களைச் சொரிந்தார்கள். கண்ணபிரான் தம்முடையபார்வையினல் விஷத்தின்வேகத்தைத் தணித்தார். விஷத்தினல் மயங்கிக்கிடந்தவர்கள் எழுந்து, நடனத்தைத் தரிசித்தார்கள். சர்ப்பம் மெல்ல மெல்ல நகர்ந்தது. கிருஷ்ணர் அதனுடைய அகந்தையை அடக்க எண்ணித் திருவடிகளை ஊன்றிநின்று நடித்தருளினர். அப்பொழுது அதன்வாயாலும் மூக்காலும் இரத்தம்பெருகியது. அது அப்பொழுது நல்லறிவு வரப்பெற்று, கிருஷ்ணரை வணங்கித் தோத்திரஞ் செய்தது. உடனேகிருஷ்ணர் நடனத்தைநிறுத்தி, யமுனைநதியை விட்டு நீங்கும்படி அதற்குக் கட்டளையிட்டருளினர்.

காளியன் கண்ணரைநோக்கி, "யான் கருடனுக்குப்பயந்து இங்கே இன்றுவரையும் வாசஞ்செய்தேன். அடியேனைக் காத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தது. கிருஷ்ணர்கருணைகூர்ந்து

"காளியனே! தக்ஷிணபூமியிலே சோழமண்டலத்திலே, தோணிபுரம் என்று ஒரு சிவத்தலம் இருக்கின்றது. நீ அங்கே போய் இறைவனை அருச்சிப்பாயாக. அவர் உனது துன்பத்தை அகற்றி அருளுவார்" என்று உபதேசித்தார். கண்ணபிரான் கூறியபிரகாரம் காளியன் அவ்விடத்தை விட்டகன்று, தோணிபுரஞ்சென்று பரமசிவனை வழிபாடுசெய்திருந்தது. சிவபெருமான், கருடனுக்குப் புறங்கொடாத வலிமையையும், அனைவரும் மதிக்குஞ் சீரினையும் காளியனுக்குக் கொடுத்தருளினர்.

வேறொருகாலத்திலே காளிதேவி சிவபெருமானோடு எதிர்த்து நடனமாடித் தோற்றாள். தேவர்களும் முனிவர்களும் சினந்து, "நீ அகந்தையினால் பரமசிவனை எதிர்த்தபாவம் அகலுமாறு அக்கடவுளை அருச்சிப்பாயாக" என்றுகூறினார்கள். காளி தோணிபுரத்தில்வந்து சிவபெருமானைப்பூசித்துத் தன்பாவம்நீங்கப்பெற்றாள்.

காளியன் என்னும் சர்ப்பம் பூசித்தமையாலும், காளி பூசித்தமையாலும் தோணிபுரம் *சீர்காழி என்னும் பெயரைப்பெற்றது.

---

## உக. திரிபுரசங்காரம்.

தாரகாசுரனைச் சுப்பிரமணியக்கடவுள் சங்காரஞ்செய்தருளிய பின்னர், அவன் புத்திரர்களாகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்னும் மூவரும் பிரமதேவரைக்குறித்துப் பலகாலம்தவஞ்செய்தார்கள். பிரமதேவர் பிரசன்னராய் "நீங்கள் விரும்பிய வரம் யாது?" என்று வினவியருளினர். தாரகனுடைய புத்திரர்கள் வணங்கி, "ஆகாயத்திலே பறக்கும் மூன்று நகரத்தையும், எண்ணில்லாத ஆயுதங்களையும், அழியாத உடம்பையும், விஷ்ணுமுதலிய தேவர்கள் வந்து எதிர்த்தாலும் அவர்கள் அஞ்சுதற்கேற்ற மிக்கவலிமையையும் தருதல்வேண்டும்" என்றுபிரார்த்தித்தார்கள். பிரமா "அவைகள் அனைத்தையும் தந்தோம். ஆயிரம் வருடம் சென்றால் முப்புரங்களும் ஒன்றுகூடும். அப்பொழுது இறத்தலில்லாத ஒருவர் ஓரம்பைச் செலுத்தினால் அழியும்" என்று சொல்லி மறைந்துபோயினர்.

---

* காழி என்பது சோழநாடு பவழம் தவழம் என்றாற்போலக் காளி என்ற சொல்லின் ளகரம் தமிழிற் சிறந்த ழகரமாய்த் திரிந்தது.

மயன் என்பான் அவர்களுக்காக பொன், வெள்ளி, இரு ம்பினுல் மூன்று மதில்களையும் நகரங்களையும் உண்டாக்கினுன். தாரகாக்கன் சுவர்க்கத்திலே பொன்மதிலாற் சூழ்ந்த நகரத்தில் இருந்து வாழ்ந்தான். கமலாக்கன் என்போன் ஆகாயத்திலே வெள்ளிமதில் சூழ்ந்த நகரத்தில் இருந்து வாழ்ந்தான். வித்துன் மாலி பூமியில் இருப்பு மதிலாற் சூழ்ந்த நகரிலே இருந்து வாழ்ந் தான். அவர்கள் சிவசின்னங்கள் அணிந்து, சிவபூசை செய்து வந்தார்கள். ஆயினும், தேவர்களை அடக்கி, எல்லா உலகங் களிலும் தமது ஆஞ்ஞையைச் செலுத்தி, அரசுசெய்தார்கள்.

பிரமாவும் இந்திரன் முதலிய தேவர்களும் திரிபுரத்தசுரர்கள் தமக்குச்செய்யும் கொடுமைக்கஞ்சி, வைகுண்ட நகரிற் சேர்ந் தார்கள். அவர்கள் விஷ்ணுமூர்த்தியினுடைய முன்னிலையில் நின்று வணங்கி, "முப்புரத்தவுணரால் எப்பொழுதும் வருந்தி உடல் மெலிந்தோம். உய்யும் உபாயத்தைக் கூறியருளுக" என் றூர்கள். விஷ்ணுமூர்த்தி தேவர்களுடன் ஒரு யாகத்தைச் செய் தார். ஓமாக்கினியில் இருந்து அனேக பூதங்கள் தோற்றின. விஷ்ணு அப்பூதங்களைத் திரிபுரத்தவுணர்மீது செலுத்தினர். அவைகள் அவுணர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்து ஆற்ருது புறங்கொடுத்து அவரை அடைந்தன. "தேவர்களே அஞ்சாதீர் கள்!" என்றுசொல்லி மாயையினுல் ஒரு புத்தவடிவங்கொண் டார். நாரதமுனிவர் சீடராய் அவருக்குப் பின்னேசென்ருர். அவர்கள் முப்புரத்திற் போய்ப் புத்தமதக் கொள்கைகளை உப தேசித்தார்கள். அவுணர்கள் சிவபெருமான்மீதுகொண்ட அன்பு நீங்கி, புத்தசமயத்தவர்களாகி, சிவபூசையையும் விட்டார்கள். கொலை களவு கள்ளுண்டல் முதலிய பாவங்களைச் செய்தார் கள். அவர்களுள் சிவபத்தர்களாகிய மூன்று அசுரர்கள் மாத் திரம் சிவபூசையை விடாது செய்தார்கள்.

விஷ்ணுமற்றைய அசுரர்களைநோக்கி, "நமக்குப்பிரியமான சீடர்களாகும்நீங்கள் அம்மூவர்களோடும் பேசாதீர்கள். அன் றியும், அவர்களோடு கலகஞ்செய்யாதீர்கள்" என்று சொன் னுர். தம்முடைய மாயையால் ஓர்வடிவு உண்டாக்கி, அங்கே வைத்தார். பின்னர் நாரதமுனிவரோடும் திருக்கைலாசமலைச் சாரலை அடைந்தார். உடனே அவர்களுடைய கட்பார்வை

மறைந்தது. விஷ்ணுவும் முனிவரும் வருந்தி, "நாம் சிவபூசைக்குப் பங்கம் செய்தமையால் இது உண்டாயிற்று" என நினைந்து, சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்தார்கள். சிவபெருமான் தோன்றியருளி, "மானசதீர்த்தத்தினருகே தேவர்கள் நம்மைத் தியானித்து இருக்கிறார்கள். நீங்கள் அங்கே செல்லுங்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். அவர்கள் தீர்த்தக் கரையை அடைந்து, தேவர்களோடும் சிவார்ச்சனைசெய்து கண்ணொளி பெற்றிருந்தார்கள்.

இருக்குங் காலத்திலே திருநந்திதேவர் சிவபெருமானுடைய ஆஞ்ஞையினாலே, திரிபுர சங்காரத்துக்கேற்ற தேர்முதலியவற்றை உண்டாக்குமாறு தேவர்களுக்குக் கட்டளையிட்டார். சூரியசந்திரர்கள் உருள்களாகவும், ஏனைய தேவர்முதலியோரும் இயங்கியற்பொருள்களும் நிலையியற்பொருள்களும் தேரின் ஒவ்வொருஉறுப்புக்களாகவும், வேதங்கள் குதிரைகளாகவும் உள்ள ஒருதேரைத் தேவர்கள் அமைத்தார்கள். அத்தேரில், பிரமா சாரதியாய்ப் பிரணவமாகிய சவுக்கைப் பிடித்துக் கொண்டு வந்தார்.

தேவர்கள் திருக்கைலாசமலையை அடைந்து, திருநந்திதேவருக்கு இதனைச் சொன்னார்கள். திருநந்திதேவர் தேவர்கள் வந்தமையை இறைவருக்கு விண்ணப்பித்தார். பரமசிவன் இடபவாகனத்தின்மீதுஇவர்ந்து தேரின்அருகே சென்றருளினார். விஷ்ணு முதலிய தேவர்கள் பரமசிவனைத் தரிசித்துத் தோத்திரம்செய்தார்கள். சிவபெருமான் இடபத்தினின்றும் இறங்கி, இடத்திருக்கரத்தில் மேருவாகியவில்லையும், வலத்திருக்கரத்தில் நாராயணாஸ்திரத்தையும் தாங்கிக்கொண்டு, இரதத்தின்மேல் திருவடியைத் தூக்கிவைத்தார். உடனே தேர், பாரும் அச்சும்முரிந்து பாதலத்தில் ஆழ்ந்தது. விஷ்ணு ஓர் இடபமாகிச் சிவபெருமானைச் சிறிதுநேரம் சுமந்தார். பின்சுமத்தற்கு ஆற்றலில்லாதவராய் வருந்திப் பிரார்த்தித்தார். சிவபெருமான் அவருக்கு மிக்க வலிமையைக் கொடுத்தருளினார்.

விஷ்ணுகடவுளைவணங்கி "அடியார்க்கெளியீர்! தேவரீருக்கு ஓர்இடபம் இருப்பினும், அடியேனும் தேவரீருக்கு இடபவாகனமாய் இருப்பதற்கு அனுக்கிரகஞ் செய்தருளுக" என்று துதித்

தார். சிவபெருமான் அங்ஙனமே விஷ்ணுவுக்கு இடபமாய் இருத்தலையும், மாறாதபத்தியையும் அருள்செய்தார். பின்னர் பிரமதேவர் தேரைச்செலுத்தச் சிறகள் நின்றநிலையினின்று பெயர்ந்தில. தேவர்கள் அதனைக்கண்டு, விநாயகக்கடவுளுக்குப் பூசைசெய்தார்கள். இரதம் விரைந்துசென்றது. திரிபுரங்களும் ஒருங்கு கூடின. சிவபெருமான் உமாதேவியாரை நோக்கிச் சிறிது புன்னகை செய்தருளினர். நகையினின்றுமெழுந்த கோபாக்கினியினால் முப்புரங்களும் எரிந்து சாம்பராயின. சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்துவந்த மூவரும் அக்கினியினாலே சிறிதும் தீங்கின்றி அக்கடவுளை அடைந்து வணங்கினர்கள். விருப்பு வெறுப்பு இல்லாத கடவுள் அவர்களைத் தமது திருக்கோயில் வாசற்காவல் செய்யுந் தொழிலைக் கொடுத்துச் சிவகணங்களோடு சேர்த்தருளினர்.

---

## உஉ. பிக்ஷாடனர்.

அந்தகாசுரன் என்பவன் கொடுங்கோல் செலுத்தி அரசாட்சி செய்துவரும் காலத்தில், பன்னிரண்டு வருஷம்மழை இல்லாதிருந்தது. பஞ்சமுண்டாயது. உயிர்கள் பசியால் வருந்தின. தாருகாவனத்தில் இருந்த முனிவர்களும் பசிநோயால் வருந்தினர்கள். அவர்கள் கௌதமமுனிவருடைய தவச்சாலையிற் போய், "ஆகாரம் தரவேண்டும்" என்று அவரை யாசித்தார்கள். கௌதமமுனிவர் அவர்களுக்கு நல்ல உணவுகளை அன்போடு கொடுத்துவந்தார். முனிவர்கள் அவரது ஆச்சிரமத்தில் இருந்து, பன்னிரண்டு வருடம் போசனஞ்செய்து வந்தார்கள். வருங்காலத்தில் மழைபொழிந்து, மிகுதியாகச் செல்வங்கள் பெருகின. பஞ்சம் நீங்கியது. அதனால், கௌதமருடைய ஆச்சிரமத்தில் இருந்த முனிவர்கள் தமது வனத்துக்குச் செல்ல நினைத்து, அவரிடம் வந்து அனுமதிகேட்டார்கள். கௌதமமுனிவர் பின்னுஞ் சிலகாலம் தமது ஆச்சிரமத்தில் இருக்குமாறு கூறி, அவர்களைப் போகாவண்ணம் தடுத்தனர்.

அப்பொழுது அம்முனிவர் மாயாரூபமாகிய பசுவொன்றை மந்திரத்தினாலுண்டாக்கி, கௌதமருடைய சமீபத்தில் விட்டார்

கள். அற்பமேனும் தசைப்பற்றில்லாமல் வந்த பசுவைக் கௌதமமுனிவர்பார்த்தார். "இதற்கு தீமைவாராமற் பாதுகாப்பேன்" என்றுநினைத்து அதன்சரீரத்தைத்தடவினார். உடனே பசு விழுந்து இறந்தது. கௌதமமுனிவர் வருத்தி மயக்கமடைந்தார். தாருகாவனத்து முனிவர்கள் கௌதமரைநோக்கி, "நீர் பசுக்கொலை செய்தீர். உமது உணவை உண்பது பெரும்பாவம். நாங்கள் இவ்விடம் விட்டுப்போகின்றோம்" என்று சொல்லித் தமது வனத்தை அடைந்தார்கள்.

கௌதமமுனிவர் இந்த வஞ்சனையை அறிந்து, "அவர்கள் வைதிக ஒழுக்கத்திற்றவறி, சிவபெருமானிடத்தில் அன்பில்லாதவர்களாய் வருந்தக்கடவர்கள்" என்று சபித்தார். அவர்கள் தவமும் யாகமுமே மோக்ஷத்தைத் தரவல்லன. கடவுளின்றித் தாமே முத்தியடையலாம் என்றுகூறும் மீமாஞ்சைமதத்திற் பிரவேசித்து அஞ்ஞானிகளானார்கள்.

சிவபெருமான் அவர்களது அஞ்ஞானத்தை நீக்கி அடிமைகொள்ளுமாறு திருவுள்ளங்கொண்டு, விஷ்ணுவை நோக்கி, "நீ எம்முடன் ஒரு கன்னிகையாகி வருதி" என்று ஆஞ்ஞாபித்தருளினார். சிவபெருமான் அம்மோகினியைத் தாருகாவனத்திலுள்ள இருடிகளுக்கு எதிராகப்போகவிட்டார். தாம் ஒரு திருக்கரத்தில் பிக்ஷாபாத்திரத்தையும், ஒரு திருக்கரத்தில் உடுக்கையுந் தாங்கிக்கொண்டு, அம் முனிபத்தினிமார் இருந்தவீதியில் பிக்ஷையேற்கச் செல்பவர்போற் சென்றார். முனிவர்கள் மோகினியைப்பார்த்து மயங்கினார்கள். முனிபத்தினிமார்கள் பிக்ஷாடனமூர்த்தியினுடைய பேரழகைக்கண்டு மயங்கி, அவருக்குப் பின்னாகச்சென்றார்கள். விஷ்ணுவாகிய பெண் சிவசந்நிதானத்தில்வர, முனிவர்கள் அவர் பின்னாகத் தொடர்ந்துவந்தார்கள். அவர்கள் தமது மனைவியரது நிலையைக்கண்டு, கோபங்கொண்டு சிவபெருமானைக் கொல்லநினைத்து, ஒரு யாகத்தைச்செய்தார்கள். அவ்வியாக குண்டத்தினின்று ஒரு புலிஎழுந்தது. முனிவர்கள் பரமசிவனைக் கொல்லும்படி அதனை விடுத்தார்கள். அது யாவரும் அஞ்சும்படி வந்தது; சிவபெருமான் அதனைப்பிடித்துத் தோலையுரித்து வஸ்திரமாகத் தரித்துக்கொண்டார். அதன்பின் அவ்வோமகுண்டத்தினின்று சூலமும் மான்கன்றும் அளவில்லாத சர்ப்பங்களும்

பூதங்களும் வெண்டலையும் முயலகனும் வெவ்வேறாகவந்து தோன்றின. முனிவர்கள் சிவபெருமானைக் கொல்லும்படி அவைகளை அனுப்பினார்கள்.

சிவபெருமான் பூதங்களைச் சேனைகளாய்த் தம்மைப்பிரியாது நிற்கும்படி கட்டளையிட்டருளினார். முயலகன் எங்கும்படி ஒரு திருவடியாற்றள்ளி, அத்திருவடியை அவன் முதுகில் ஊன்றிக்கொண்டுநின்றார். தம்முடைய திருமேனியில் மற்றைய எல்லாவற்றையும் அணிந்தருளினார். முனிவர்கள் தங்கள் மந்திரங்களை ஒன்றாக ஏவினார்கள். அவைகள் ஒரு உடுக்குவடிவாகி, ஒலித்துக்கொண்டு அவரை அணுகின. சிவபெருமான் அவ்வுடுக்கைப்பற்றி ஏந்திநின்றார். முனிவர்கள் மனம்வருந்திநின்றார்கள். பிராணநாயகராகிய சிவபெருமான் முயலகன்மீது நின்று பஞ்சகிருத்திய நிருத்தம் செய்தருளினார். தாருகாவனத்து முனிவர்கள் தவவலி குறைந்து, மயங்கி விழுந்தார்கள். தேவர்கள் நமஸ்காரஞ்செய்தார்கள். விஷ்ணு மோகினிவடிவம்நீங்கி, சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தார். முனிவர்கள் "அடியேங்களுடைய குற்றம் நீங்கும்படி திருவுள்ளங்கொண்டருளும்" என்று விழுந்து பணிந்தார்கள். சிவபெருமான் அவர்கள்மீது கிருபாநோக்கஞ்செய்தருளினார். முனிவர்கள் நிருத்தத்தை அன்போடு தரிசித்தார்கள். சிவபெருமான் அவர்களுக்கு அருள்செய்து திருக்கைலாசமலையிற்போய், உமாதேவியாருடன் வீற்றிருந்தருளினார். தாருகாவனத்து முனிவர்கள் சைவசமயிகளாய், விபூதி ருத்திராக்ஷந்தரித்துச் சிவபூசைசெய்து சுத்தரானார்கள்.

---

## ௨௫. இடபதேவருக்குப் புல் அருத்தியது.

கௌசிகம் என்னும் நாட்டிலே, விக்கிரமம் என்று ஒரு நகரம்உண்டு. அந்நகரத்திலே ஆனந்தன், சூரியசன்மா என்னும் பிராமணர் இருவர் தங்களுள்ளே பகைவர்களாய் இருந்தார்கள். வஞ்சகனாகிய ஆனந்தன் சூரியசன்மாவைப் பகைத்து வெற்றி கொள்ளுதல் எம்மால் முடியாது என்று நினைத்தான். நினைத்து நட்புடையவன்போல நடித்துவந்தான்.

ஒருநாள் ஆனந்தன் சூரியசன்மாவை நோக்கி, "நமது ஊர்த் தெருக்களில் புலிகள் சஞ்சரிக்கின்றன. நீ வெளிப்படாமல்

இருக்குதி; இவ்விரவிற் புலி வருவதைப்பார்த்து உன்னை அழைப்பேன். நீ அதனைக் கொல்லுவாயாக" என்முன். சூரியசன்மா ஆனந்தனுடைய வஞ்சகத்தை அறியாதவனுய் அதற்கு உடன்பட்டான். அன்பும் அருளும் இல்லாதவனுகிய ஆனந்தன் ஒரு கிழப்பசுவைப் புலித்தோலால்மூடிக் கட்டிவிட்டு, சூரியசன்மாவை உரக்கக்கூப்பிட்டான். சூரியசன்மா வில்லைக் கையிலேந்திக்கொண்டு விரைந்து வெளியே வந்தான். ஆனந்தன் "இதுதான் புலி" என்று சுட்டிக்காட்டினன். சூரியசன்மா அவ்வார்த்தையை நம்பி அம்பைச்செலுத்தினன். உடனே அப்பசு விழுந்து இறந்தது.

பின்பும், ஆனந்தன் சூரியசன்மாவைநோக்கி, "நடு இரவு இன்னும் நீங்கவில்லை. நாம் இங்கே இருப்பதைக் கள்வர்கள் அறிந்தால், எங்கள் வீட்டில் உள்ளவர்களைத் துன்பஞ்செய்வார்கள். நானே சென்று எங்கள்வீட்டைப் பார்த்துவருவேன். நீர் இவ்விடம் இரும்" என்று கூறிச் சூரியசன்மாவின் வீட்டை அடைந்தான். அவனுடைய மனைவியைநோக்கி, "தாயே! திருடர்கள் இங்கேவந்து உன்னைவருத்துவார்கள்" என்றுசொல்லி, அவளைக் கொண்டுபோய் அவளுடைய மகனது படுக்கைஅறையில் விட்டான். மகனையும் அவனுடைய மனைவியையும் அழைத்துச் சென்று, அவன் பிதாவாகிய சூரியசன்மாவின் படுக்கைஅறையில்விட்டு, "தம்பி! இவ்விராக்காலத்தில், உனது தந்தையைப் போலக் கள்வர்வந்து கூப்பிடுவார்கள். நீ கதவைத் திறக்காதே" என்முன். பின்பு ஆனந்தன் சூரியசன்மாவிடம்போய், "உனது மனைவி வேறொருவனை வருவித்து, அவனோடு சயனித்திருக்கின்றனள்" என்று சொன்னன். அதனைக்கேட்ட சூரியசன்மா நெடுமூச்சுவிட்டு, தனது வீட்டுவாயலில் வந்து மனைவியை அழைத்தான். அவர்கள் கதவைத்திறக்கவில்லை. அவன் ஒரு மதிலின்மேலேறித் தனது வீட்டினுட் பிரவேசித்தான். அங்கே நித்திரை செய்பவர்கள் தனது மருகியும் மகனும்என்பதை அறியாதவனுய் அவர்களை வாளினுலே வெட்டிக் கொலைசெய்தான்.

மற்றைநாட்காலையில் சூரியசன்மாவின் மனைவி தன்வீட்டுக்குச் சென்முள். அப்பொழுது மகனும் மருகியும் கொலையுண்டு கிடப்பதைக்கண்டு, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறினுள். அவளது அழுகை ஒலியைக் கேட்ட சூரியசன்மா

ஓடிவந்து பார்த்தான். நடந்த வஞ்சனையை அறிந்து தானும் புலம் பினான். அதற்குள் ஆனந்தன் அந்தணர்சபைக்குச் சென்று, "சூரியசன்மா ஒரு பசுக்கொலை செய்தான். அதுவுமன்றித் தன் மகனையும் மனைவியையும் கொலைசெய்தான்" என்று அறிவித்தான். சபையோராகிய அந்தணர்கள் சூரியசன்மாவை அழைப்பித்தார்கள். அவனும் அச்சபைக்கெதிரில் வந்தான். சபையோர்கள் "நீ கொடிய பாதகங்களையெல்லாம் செய்தாய் இதனால் நீ நீசனானாய்; பாவியாகிய உன்னைப் பார்த்தாலும் தகாது" என்று சொன்னார்கள். சூரியசன்மா சபையோரைவணங்கி, அன்றுவரையில் ஆனந்தன் தனக்குச் செய்தவஞ்சனைகள் எல்லாவற்றையும் ஒன்றும் விடாமற் சொன்னான். சபையார் சூரியசன்மாவைநோக்கி "இப்பொழுதே நமது கேதாரேசுரர் திருக்கோயிலை அடைந்து, சந்நிதியில் உள்ள இடபதேவர் புல் அருந்தும்படி செய்வாயாயின், நீ சொல்லியவை உண்மை" என்றார்கள். சூரியசன்மா "அந்த இடபத்துக்கேயன்று, திருமதிலிலுள்ள இடபங்களுக்கும் கோபுரத்தில் இடபங்களுக்கும் புல் அருந்துவேன்" என்றான். அந்தணர்கள் சூரியசன்மாவுடன் திருக்கோயிலுக்குச் சென்றார்கள்.

சூரியசன்மா புல்லுடன் கோயிலை அடைந்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு, மதில்முதலிய இடங்களில்இருக்கும் இடபங்களை அழைத்தான். அவைகள் இடபதேவருக்கு அருகேவந்து, அவன்கொடுத்த புற்களை அருந்தின. எல்லோரும் அதைக்கண்டு அதிசயித்துத் திருவருளைத் துதித்தார்கள்.

அப்பொழுது சூரியசன்மாவின் மனைவி அவனை நோக்கி, "இறந்தபசுவும் மகனும் மருகியும் உயிர்பெற்று எழும்படி செய்யும்" என்று வேண்டினாள். சூரியசன்மா ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மானசமாகச் செபித்தான். உடனே பசு உயிர்பெற்று எழுந்தது, மகனும் மருகியும் உயிர்பெற்று எழுந்தார்கள். யாவரும் இவ்வதிசயத்தைக் கண்டு சிவபெருமானை வணங்கினார்கள். அங்கே வந்த இடபங்களெல்லாம் தத்தம் இடங்களை அடைந்தன. எல்லாரும் சூரியசன்மாவிடம் விடைபெற்றுச் சென்றார்கள். இவைகளைக்கண்ட ஆனந்தன் காட்டில் ஓடி ஒளித்தான். அங்கே கடும்பிணிகொண்டு இறந்து நரகமடைந்தான். சூரியசன்மா இவ்வுலகத்தில் அனேகநாள் வாழ்ந்திருந்து திருக்கைலாசமலையை அடைந்தான்.

சோமேசர் முதுமொழிவெண்பா.

தோருமா னந்தனைமுன் றேறிப் பழிபூண்டான்
சூரியசன் மாவென்பான் சோமேசா—தாரணிமேல்
சேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

---

## உ௪. சிவஞானமுனிவர்.

பாண்டிநாட்டிலே, பொதியம் என்னும் ஒருமலைஉண்டு. அம்மலைச்சாரலில் உள்ள பாபநாசம் என்னுந்திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே, சைவவேளாளர் குலத்திலே, ஆனந்தக்கூத்தர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபத்தி முதலியவற்றிற் சிறந்தவர். அவர் பனைவியார் பெயர் மயிலம்மையார். அவரது வயிற்றிலே ஒரு சற்புத்திரர் அவதாரஞ்செய்தார். அப்புத்திரர் முக்காளலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று, ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர்.

முக்காளலிங்கர் ஐந்துபிராயத்திலே வித்தியாரம்பஞ்செய்யப் பெற்று, ஓர் பாடசாலையில் அமர்ந்து கல்விகற்று வந்தார். அக்காலத்திலே திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சிலமுனிவர்கள் விக்கிரமசிங்கபுரத்து வீதியிலே சென்றார்கள். பள்ளிக்கூடத்தினின்றும் புறப்பட்ட முக்காளலிங்கர் அம்முனிவர்களைச் சந்தித்து, வணங்கி, "சுவாமிகாள்! அடியேன் வீட்டிற்கு எழுந்தருளித் திருவமுதுசெய்து, பின்பு சென்றருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அம்முனிவர்கள் முக்காளலிங்கர்பிரார்த்தனைக்கு இரங்கி, விருப்பத்தோடு உடன்பட்டு அவருடன் அவரது வீட்டிற்குப் போயினர்கள். முக்காளலிங்கர் அருந்ததியை யொத்த தமது அன்னையாரை அவர்களுக்குத் திருவமுது அருத்துமாறு கூறினர். மயிலம்மையார் உபசரிக்க முனிவர்கள் அமுதுசெய்துபோனர்கள். முக்காளலிங்கர் தமது கருத்தின்படி அடியார்களை உபசரித்த தயாரைப்பற்றி,

அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
மானந் தவாத மயில்.

என்னுஞ் செய்யுளை இயற்றியருளினர். பின்னர் அவர் தந்தையார் வீட்டிற்கு வந்து, நடந்த விஷயங்களைக் கேட்டு மிக்க ஆனந்த முற்ருர்.

உடனே ஆனந்தக்கூத்தர் புத்திரராகிய முக்காளலிங்க ரோடு ஆதீன முனிவரிடத்தே போய் வணங்கினர். அப்பொழுது முக்காளலிங்கர் அம்முனிவர்களோடு தாம் செல்ல வேண்டும் என்னும் குறிப்பினை உணர்த்தினர். புத்திரரைப்பிரியச் சிறிதும் மனமில்லாதிருந்தும் தந்தையார் ஒருவாறிசைந்து அவரை அவர் களோடு விடுத்து வீட்டுக்குத் திரும்பினர்.

முனிவர்களோடு முக்காளலிங்கர் வழியிலேயுள்ள சிவஸ் தலங்களை வழிபட்டுக்கொண்டு திருவாவடுதுறை மடாலயத்திற் பிரவேசித்து, ஞானசாரியராகிய பின்வேலப்பதேசிகரைக் கண்டு பணிந்து, அவரிடத்தே சைவசன்னியாசமும், சிவதீக்ஷையும், சிவஞானயோகிகள் என்னும் தீக்ஷாநாமமும் பெற்றுச் சித்தாந்த சாத்திரங்களை முறையாகக் கற்றுக்கொண்டார்.

சிவஞானயோகிகள் வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளினும் பூரண பாண்டித்தியம் பெற்றவர். இவர் இயற் றிய நூல்கள் காஞ்சிப்புராணம் முதற்காண்டம், கம்பரந்தாதி முதலியனவாம். உரைகள் சிவஞானசித்தியார் உரை, சிவஞான போதமாபாடியம் முதலியனவாம். திருத்தணிகைப்புராணம் முதலிய பற்பல நூல்களை இயற்றிய திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர், கல்லைசைச் சுப்பிரமணிய முனிவர் முதலாஞேர் இவ ருடைய மாணக்கராவர்.

இங்ஙனம் செந்தமிழ்ப் பாஷையை அபிவிருத்தி செய்து சிவஞானயோகிகள் திருவாவடுதுறையிலே சிவபரிபூரண தசையை அடைந்தனர்.

---

## ௨௫. சங்கரபண்டிதர்.

சிவபத்திமிக்கவரும், வரகவியும், சிவராத்திரிபுராணம் முத லிய நூல்களைச் செய்தவருமாகிய வாதப்புலவருக்கும் வேறு பலபுலவர்க்கும் உறைவிடமாய் இருந்த சுன்னுகம் என்னும் ஊரிலே, சைவவேளாளர் குலத்திலே, சிவகுருநாதபிள்ளை என் னும் சிவபத்தர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் சீர்வேலி

யிற் பிரசித்திபெற்று வாழ்ந்திருந்த அருணுசலம்பிள்ளையின் புத்திரியாராகிய தெய்வயானை அம்மையாராவர். அவ்விருவரும் இல்லறம் நடத்திவரும் நாளிலே தமிழுலகம்செய்த தவத்திஞலே கலிவருடம் சகூகல் ஒரு புத்திரரைப் பெற்றெடுத்தார்கள். இவரே சங்கரபண்டிதர் என்பவர்.

இவர் உரிய பருவத்திலே வித்தியாரம்பஞ்செய்யப்பெற்றார். மஹாவித்துவானுயிருந்த சேஞதிராசமுதலியாரது மாணவராகிய கந்தரோடை அப்பாபிள்ளையிடத்திலே தமிழிலுள்ள இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்றுவந்தார். சம்ஸ்கிருதங்கற்க வேண்டும் என்னும் ஆசைமிகுந்து வேதாரணியஞ்சென்று, அங்கிருந்த வை. சுவாமிநாததேசிகரிடத்திலே, சம்ஸ்கிருதநிகண்டு காவியம் முதலியவற்றைக் கற்றுர். திருப்புகலூரிற் சிலகாலம் இருந்து, அங்குள்ள ஒரு சாஸ்திரியாரிடத்திலே தருக்க வியாகரணங்களை இனிது படித்தார். இவர் குருமுகமாகக்கற்றவற்றிலும், தம்முடைய யுத்தியினுலும் பிரயாசத்திஞலும் கற்றுத்தேர்ந்தன மிகப்பல. அக்காலத்திலே இக்காலத்திற்போலப் பற்பல புத்தகங்கள் அச்சிடப்பட்டு இருக்கவில்லை. ஆதலால்ஏடுகள்தேடித் தமிழ் சம்ஸ்கிருதம் என்னும் இரண்டுபாஷைகளையும் படித்துத் தேர்ந்தது அரும்பெருஞ் செய்கையன்றே.

இவர் வேதாரணியப்பதியில் இருந்த முத்துச் சுவாமி தேசிகரிடத்திலே நிருவாணதீக்ஷை பெற்றுர். அத்தேசிகரின் மைத்துனராகிய அ. சுவாமிநாததேசிகரிடத்திலே சிவஞான போதம் முதலிய சித்தாந்த சாத்திரங்களை இனிது படித்து வல்லவராய், இலக்கிய இலக்கண தருக்க வேதாந்த சித்தாந்த சமுத்திரமாய் மஹாபண்டித சிரோமணியாய் விளங்கினுர்.

இவ்வியாழ்ப்பாணத்திலும், இந்தியாவிலும் உள்ள பற்பல ஊர்களிலுஞ்சென்று, அருமையான பல ஏட்டுப்பிரதிகளைத் தேடி வருதலும், ஏடுகளிலே வேண்டியகிரந்தங்களைப் பல பிரதி ரூபங்கொண்டு பரிசோதித்து எழுதுதலும் இவருக்கு இடையாறுத வேலையாயின. வசனரூபமான சில நூல்களையும், சில நூல்களுக்கு உரைகளையும் இயற்றுதலும், நன் மாணுக்கர்களுக்கு உளங்கொளக் கலைபோதித்தலும் இவருக்கு முக்கிய முயற்சியாயின.

பண்டிதர் உலோகோபகாரமாகச் செய்தநூல்கள் சம்ஸ்கிருத முதலாம் இரண்டாம் பாலபாடங்கள், சத்தசங்கிரகம், அகநிர்ணயத்தமிழுரை, சைவப்பிரகாசனம், சிராத்தவிதி முதலியனவாம். இவர்செய்த நூல்கள் அனைத்தும் அச்சில்வருமாயின் அது சைவ உலகம் செய்ததவப்பேறு என்றே கூறலாம். இவரிடம் முறையாகக் கற்றோரும், சந்தேகங்களை வினவித்தெளிந்தோருமாயுள்ளோர் மிகப்பலராவர்.

நீர்வேலி சந்திரசேகரக்குருக்களும், கீரிமலைச் சிவன்கோயிற் றருமகர்த்தர் சபாபதிக்குருக்களும், மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிற் றருமகர்த்தர் சாமிக்குருக்களும், புலோலிப் பசுபதீசுரன்கோயில் பிரதமாசாரியர் அல்வாய் இராமலிங்கக்குருக்களும், மாதகல் பரமசுவாமிக்குருக்களும், சைவப்பிரசாரகர் நந்தாவிற் சுப்பையரும் இவரிடத்திலேயே செந்தமிழும் சம்ஸ்கிருதமும்பயின்றுகொண்டார்கள். இந்தியாவிற் பெரும்புகழ்படைத்து விளங்கிய சுன்னாகம் முருகேசபண்டிதரும், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் கோப்பாய்ச் சபாபதிநாவலரும், பண்டிதருடைய மாணாக்கர்களே. முருகேசபண்டிதர் தாம் இயற்றிய ஒவ்வொருநூலிலும் பண்டிதரைச் சுட்டிக் குருவணக்கக்கவிகள் பாடியிருக்கின்றார். இவரிடத்துப் படித்துத்தேறினோர் இன்னும் பலராவர்.

இவர் விவேகம் அவதானம் என்னும் இரண்டும் மிக விசேஷமாகவுடையவர். அன்பு அருள் அடக்கம் முதலிய குணங்களெல்லாம் நிரம்பப்பெற்றவர். சைவசமயாசாரங்களை இயன்றமட்டும் செவ்வையாக அனுட்டித்தவர்.

இவர்காலத்திலே பாதிரிமார்கள் அநேக போதகர்களையும் போதகிகளையும் நியமித்து, அவர்கள் மூலமாகத் தமது கிறிஸ்து மதத்தைப் பரப்பிவந்தார்கள். இவர் பற்பல பாதிரிமாரிடத்துஞ் சென்று, அவர்கள் நாவடங்கச் சமயவாதச் சொற்போர்செய்து, வென்று வந்தார். கிறிஸ்துமதகண்டன சைவஸ்தாபனங்களில் ஆறுமுகநாவலருக்குத் துணையாய் இருந்தார். மிலேச்சமதவிகற்பம், கிறிஸ்துமதகண்டனம் என்னும் இரு நூல்களையுஞ் செய்தார்.

புறச்சமயங்களை நிராகரித்துச் சைவசமயத்தை நாட்டிப் பிரசங்கஞ்செய்வதில் தமக்குப் பிறரொருவரும் இணையில்லாத வர். இவருடைய பிரசங்கமாரியினால் சைவப்பயிர் மிகத்தழைத் தோங்கிற்று. இவர்களால் யாழ்ப்பாணத்திற் பற்பல இடங்க ளிலும் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் காலந்தோறும் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. வேதாரணியத் துத் திருக்கோயிலிலும், திருவாரூர்த் திருமடத்திலும், சிதம்பரம் பச்சையப்பமுதலியார் பாடசாலையிலும், பிறவிடங்களிலும் பிர சங்கங்கள் செய்யப்பட்டன.

இவர் நீர்வேலியிலே தமது மாதுலர்புத்திரியை மணந்து இல்லறத்தை இனிது நடத்திவந்தார். இவருக்கு சிவப்பிரகாச பிள்ளை, சிவகுருநாதபிள்ளை என்னும் புத்திரர்கள் இருந்தார்கள். இவர்கள் தமது தந்தையாராகிய சங்கரபண்டிதரிடத்தே வட மொழி தென்மொழி நூல்களையெல்லாங் கற்று விற்பன்னர்க ளாய் விளங்கினார்கள்.

பண்டிதர் தாம்செய்த நூல்களையும் உரைகளையும் அச்சிட விரும்பி, தமது நாற்பத்திரண்டாவது வயதிலே சென்னைக்குச் சென்றார். சென்றபோது கோயமுத்தூரில் இருந்து நாகலிங்க சுவாமி என்பவருக்குத் தர்க்கம் கற்பித்துக்கொண்டிருந்தார். இருக்குநாளிலே, சைவசித்தாந்தபானுவாகிய பண்டிதர் சிவப தப்பிராப்தியாயினார்.

சிவபூசாதுரந்தரராய் விளங்கிய சிவப்பிரகாச பண்டிதர் திருச்செந்தூர்ப் புராணஉரை, கிருட்டினன்தூதுச்சருக்கஉரை முதலிய உரைகளையும் வேறுசில நூல்களையும் செய்து, பலமாணாக் கர்களுக்குப் போதித்தும் வந்தார். நீர்வேலியில் ஒரு பாடசா லையையும் தாபித்துச் செவ்வனே நடாத்திவந்தார். இவர், தா மும் தமது தந்தையாரும் செய்த நூல்களை அச்சிடவேண்டி இந்தியா சென்றார். சிதம்பரத்திலே மார்கழித்திருவாதிரை உற் சவதரிசனம் செய்துகொண்டு வேதாரணியம் சென்றார். அங் கே வேதாரணியேசுரரைத் தரிசித்து இருக்குநாளிலே, அப்பெ ருமானுடைய பாதநீழலை அடைந்தார்.

55

## சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் எழுதி

### அச்சிடப்பெற்ற புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சம்ஸ்கிருதம். | | | ரூ |
| சிவாகமசேகரம் பிரதிட்டாவிதி | .... | விலை | 5-0 |
| பி ணயகலஹவர்ணனம் | .... | ,, | -25 |
| தமிழ் | | | |
| சிவபூசைவிளக்கம் | .... | ,, | 3-00 |
| பிராசாததீபம் .... | .... | ,, | 1-00 |
| சிவபூசைவிதி .... | .... | ,, | -75 |
| அனுட்டான அகவல் | .... | ,, | -25 |
| விநாயகபரத்துவம் .... | .... | ,, | -7 |
| புவனேசுவரி மகத்துவம் | .... | ,, | -25 |
| சைவப்பிரகாசிகை 5-ம் புத்தகம் | .... | ,, | 1-0 |
| ,, 4-ம் ,, | .... | ,, | -7 |
| ,, 3-ம் ,, | .... | ,, | -3 |
| ,, 2-ம் ,, | .... | ,, | -5 |
| ,, 1-ம் ,, | .... | ,, | - |

வேண்டியவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

ச. கு. வைத்தியேசுவரக்குருக்க
அச்சுவேலி P. O.
சிலோன்.